www.padippakam.com

# i Norge

நோர்வேயச் சரித்திரம், புவியியல், குடும்ப வாழ்க்கை மற்றும் பண்பு பற்றியதோர் இலகுவான அறிமுகமே "நோர்வேயில்" என்ற இச் சிறுபிரதி.



Tamil

UDI

படிப்பகம்

www.padippakam.com

"நோர்வேயில்" என்ற இச்சிறுபிரதி
கீழ்காணும் மொழிகளில் காணப்படும்:
அல்பானியம், அரபு, ஆங்கிலம்,
பிரெஞ்சு, நோர்வே, சர்போகுறுவாதியம்,
சோமாலி, தமிழ், திக்கிரின்யா, துருக்கி,
பாரசீகம்.

வெளியீட்டனர்:
Utlendingsdirektoratet,
Tolke- og informasjonsavdelingen
ஆசிரியர்:
Eli Skarpnes
பதிப்பாளர்:
Anne-Lise Bay Braathen
மொழிபெயர்ப்பு:
Nagalingam Yoga
உருவக அமைப்பு:
Eivind Abusdal
அச்சுக் கோர்வை:
DATXT, Horten
அச்சகம்:
DL Grafisk A/S
முற்பக்கப் புகைப்படம்:
மேற்குப் பிரதேசத்திலுள்ள ரோ
என்னுமிடத்திலுள்ள அலங்காரப்பூ
வருணப்பெட்டியினது வடிவம்
புகைப்படப் பிடிப்பாளர்:
Svein Skare

12/92: 2.000
ISBN 82-427-0201-2

படிப்பகம்

www.padippakam.com

# i Norge

ஏலி ஸ்கார்ப்னெஸ் அவர்களது
சிறுபிரதியிற் கையாளப் படுபவை:



மனிதர்கள் பக்கம் 4



சரித்திரம் பக்கம் 6



புவியியல் பக்கம் 18



குடும்ப வாழ்க்கை பக்கம் 26



பண்பாடு பக்கம் 42

படிப்பகம்

www.padippakam.com



# மனிதர்கள்

1992 ல் நோர்வேயினுடைய 4,2 கோடி குடிமக்களில் சுமாராக 3% மட்டுமே நோர்வேய மொழியை விட வேறு தாய்மொழியைக் கொண்டுள்ளார்கள்.

பண்டைக் காலந்தொட்டு லாப்பியர்களே நாட்டிலுள்ள பெரிய சிறுபான்மையினமாவர். வேறு நோர்வேயர்கள் அவ்விடத்திற்கு வருவதற்கு முன்பாக வட நோர்வேயில் லாப்பியர்கள் வசித்தார்கள். லாப்பியர்கள் நோர்வேய மொழியிலும் பார்க்க முற்றிலும் வேறுபட்ட தமது சொந்த மொழியையும், தமது பரம்பரையான வழக்கங்களையும் பேணிப் பாதுகாத்துவந்துள்ளார்கள். ஆனாலும் அநேகமானோர் நோர்வேய மொழி பேசுவார்கள். லாப்பியர்கள் அத்துடன் சுவீடன், பின்லாந்து மற்றும் ரஷ்யாவிலும் வசிக்கின்றார்கள். நோர்வேயில் தற்பொழுது சுமாராக 40 000 லாப்பியர்கள் உள்ளார்கள்.

கிவேனர்கள் வேறொரு சிறுபான்மையினமாகும். அவர்கள் 1700-ம் ஆண்டுகளில் வட நோர்வேயிற்குக் குடிபெயர்ந்த பின்லாந்தவர்களின் சந்ததியினராவர்.

துருவ மானை வேட்டையாடுமொரு சாமர்.





படிப்பகம்

www.padippakam.com

பல கிவேனர்கள் நோர்வே மொழியைப் பேசுவதுடன் பின்லாந்து மொழியையும் பேணிப் பாதுகாத்து வந்துள்ளார்கள்.

சிகொய்னர்கள் நோர்வேயிலுள்ள ஆகக் குறைந்ததொரு சிறுபான்மையினம். அவர்கள் ஆதியில் இந்தியாவிலிருந்து வந்ததோர் தெற்கு-ஐரோப்பிய நாடோடி வம்சத்தைச் சேர்ந்தவர்கள். சில சிகொய்னக் குடும்பங்கள் பல தலைமுறைகளாக நோர்வேயப் பிரஜைகளாக இருந்திருக்கின்றன. நோர்வேயில் வாழும் அநேகமான சிகொய்னர்கள் தமது சொந்த மொழியுடன் நோர்வேய மொழியும் பேசுவார்கள்.

நோர்வேயின் முழுச் சரித்திரத்தினூடாகவும் மற்றைய நாடுகளுடன் தொடர்பு இருந்ததுடன், மாலுமிகளாகவும், வியாபாரிகளாகவும், சுரங்க மற்றும் கட்டிடத் தொழிலாளர்களாகவும் அல்லது அரசாங்க சேவையாளர்களாகவும் குடிபுகுந்தவர்கள் வந்திருக்கின்றார்கள். அநேகமானோர் அயல்நாடுகளிலிருந்தே வந்திருக்கின்றனர். அநேகமான நோர்வேயர்கள் பல தலைமுறைக்கு முன்பு நாட்டிற்கு வந்து குடியேறியவர்களுடைய சந்ததியினரே.

மற்றைய பல ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பிடும் பொழுது, நவீன காலத்தில் நோர்வேயில் மிகக் குறைந்த குடிவரவே ஏற்பட்டுள்ளது. நோர்வேயக் கலாச்சாரத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டதொன்றிலிருந்து வெகு சில மனிதர்களே வந்திருக்கின்றனர். நோர்வேயக் குடிமக்கள் ஆதலினால் ஒரே தன்மையானவர்கள்.

நாட்டிலுள்ள பல இடங்களில் நோர்வேயர்கள் இன்னமும் அந்நியக் கலாச்சாரத்திலிருந்து வந்த மக்களுடன் ஒருமித்து வாழக் குறைவாகப் பழக்கப்பட்டவர்களாக இருக்கின்றார்கள்.

சில நோர்வேயர்கள் அக்கறையுள்ளவர்களாகவும், விருந்தோம்பும் தன்மையுடையவர்களாகவும் மற்றும் வெளிநாட்டவர்களுடன் தொடர்பு கொள்ள விருப்புள்ளவர்களாக இருக்கின்றார்கள். மற்றவர்கள் அறிமுகமில்லாததொன்றிற்கு நம்பிக்கையில்லாது இருக்கின்றார்கள். தஞ்சம் கோருபவர்களாகவும், அகதிகளாகவும் வந்துள்ள வெளிநாட்டவர்கள் அரசாங்கத்திற்கு அதிக செலவை ஏற்படுத்துவதுடன், நோர்வேயர்களுடன் வேலைகள், வீடுகள் மற்றும் பாடசாலை இடங்களுக்குப் போட்டி போடுவதுமன்றி நோர்வேயக் கலாச்சாரத்தையும் எதிர்மாறாக ஆக்கிவிடுவார்கள் எனச் சிலர் எதிராக இயங்குகின்றார்கள்.

அநேகமான நோர்வேயர்கள், மற்றைய நாடுகளில் தேவையால் வாடும் மக்களுக்கு உதவி செய்வதற்கு உடன்பாடாக இருக்கின்றார்கள். ஆனால் அதே சமயம் கடைசி யுத்தத்திற்குப் பின்னால் நோர்வேயில் உருவாக்கப்பட்ட பாதுகாப்பு உணர்வு, வாழ்க்கைத் தராதரம் ஆகியவற்றில் சிலவற்றை இழந்து விடுவோமோ எனக் கூடுதலாகப் பயப்படுகின்றார்கள்.



ஒஸ்லோவிலுள்ள பாகிஸ்தானியக் கடையொன்றினில் நிரந்தர வாடிக்கையாளர்.



படிப்பகம்

www.padippakam.com



## சரித்திரம்

10 000 ம் வருடங்களுக்கு முன்பு வட-ஐரோப்பாவின் பெரும் பகுதி தடித்த பனிக்கட்டியால் மூடப்பட்டு இருந்தது. இந் நேரத்தில் சுவாத்தியம் படிப்படியாக வெப்பமுற்றுப் பனிக்கட்டி உருக ஆரம்பித்துச் சமுத்திரத்தை நோக்கிப் பெருகத் தொடங்கியது. பின்னல் நோர்வே நாடாக மாறிய அப் பகுதியில் பனிக்கட்டியும் ஆறுகளும், உயர்ந்த மலைகளுக்கு இடையில் ஆழமான பள்ளத்தாக்குகளை உருவாக்கின. படிப்படியாகப் பனிக்கட்டி மறைந்து நிலமும் காய்ந்தவுடன், மரங்களும் மிருகங்களும் வந்தன. தெற்கிலும், கிழக்கிலுமிருந்து முதல் மனிதர்கள் வேட்டையாடவும், மீன்பிடிக்கவுமே வந்தனர். அவர்கள் மிருகத் தோலை அங்கியாக அணிந்து, எலும்பாலும் கல்லாலும் செய்யப்பட்ட ஆயுதங்களையும் உபகரணங்களையுமே பாவித்தனர்.

சுமாராக 5 500 வருடங்களுக்கு முன்பு ஸ்கண்டிநாவியாவிலிருந்த மனிதர்கள்

மேற்குத் தேசத்திலுள்ள பனிப்படலம்.



FOTO: KNUDSENS FOTOSENTER



படிப்பகம்

நிலத்தில் பயிர் விளைவிக்கத் தொடங்கினர். எங்களுடைய காலம் வரைக்கும் பல ஆயிரம் ஆண்டுகளாக அநேகமானோர் வேட்டை, மீன்பிடி மற்றும் விவசாயத்தினுலேயே சீவித்தனர்.

சுமாராக 1 000 வருடங்களுக்கு முன்பு நோர்வே சுய இராச்சியமானது. இந் நேரத்தில் ஸ்கண்டிநாவியாவிலிருந்த நாடுகளுக்கிடையில் நிரந்தரமான எல்லைகள் இருக்கவில்லை. தம்முடைய பகுதிகளைத் தலைவர்கள் பரிபாலித்து வந்ததுடன் அநேகமாக அவர்களுக்கு இடையில் யுத்தமும் மூண்டது. வீக்கிங்மார்கள் என்றழைக்கப்பட்ட கடற்கொள்ளைக்காரர்கள் பெரிய கப்பல்களைக் கட்டித் தெற்கு-ஐரோப்பா, இங்கிலாந்து, ஐஸ்லாந்து, கிரீன்லாந்து மற்றும் நோர்வேக்கு மேற்குப் பகுதியிலுள்ள தீவுகளுக்குப் பயணம் செய்தனர். நோர்வேய வீக்கிங்மார்களில் ஒருவர் வட-அமெரிக்காவிற்கு வழியைக் கண்டுபிடித்தார். மற்றும் சிலர் கிழக்கு நோக்கி ஆறுகள் வழியாகப் படகு மார்க்கமாகக் கருங்கடலுக்குச் சென்று இஸ்தான்புல் வரைக்கும் வந்தார்கள்.

வீக்கிங்மார்களில் சிலர் தாம் வந்தடைந்த புதிய இடங்களிலேயே குடியேறி வசித்தார்கள். அவர்கள் நிலத்தைப் பயிரிட்டதுடன், வர்த்தகமும் செய்தார்கள். ஆனுல் அத்துடன் பலர் பாதுகாப்புப் பலவீனமான நாடுகளில் கொள்ளையடித்துச் சூறையும் ஆடினுர்கள். நோர்வேய அரசர்கள் ஒரு காலத்தில் வட கடலையும், நோர்வேயச் சமுத்திரத்தையும் சுற்றிய பெரும் பகுதிகளைப் பரிபாலித்தார்கள்.

இங்கிலாந்து மற்றும் மத்திய ஐரோப்பிய நாடுகளுடைய தொடர்பினூடாக நோர்வேய வீக்கிங்மார்கள் கிறிஸ்தவ மதத்திற்கு அறிமுகமானுர்கள். அந்நேரத்தைய நோர்வேய அரசர்களில் கூடுதலாக அறிமுகமானவர் நோர்வேயில் கிறிஸ்தவ மதத்தை ஒரேயொரு சட்டப்படியான மதமாக அறிமுகம் செய்த ஊளாவ் ஹரால்ட்சன் ஆவார். அப் புதிய சமயத்தை ஏற்றுக்கொள்ள விரும்பாதவர்களிடம் கொடூரமாக அவர் நடந்து கொண்டதுடன், பல எதிரிகளையும் அவர் சம்பாதித்துக் கொண்டார். 1030 இல் நடந்த ஒரு போரில் அவர் கொல்லப்பட்டதன் பின்னுல் மக்கள் அவரைப் புனிதமானவராகக் கருதியதுடன், பின்னுல் அவர் புனித ஊளாவ் என்றும் அழைக்கப்பட்டார். கிறிஸ்தவ மதம் அறிமுகம் செய்யப்பட்ட பின்னுல் நோர்வேய வீக்கிங்மார்கள் வெளியே சென்று சூறையாடுவது படிப்படியாக நின்றது. ஆனுல் மற்றைய நாடுகளுடனுன தொடர்பு வியாபாரத்தினூடாகத் தொடர்ந்தது.




வட அமெரிக்காவை லயிவ் எயிறிக்ஸொன் கண்டுபிடிக்கின்ருர்.

தேவாலய வரி மற்றும் பல கொடைகளின் காரணமாகத் தேவாலயம் படிப்படியாகப் பெரும் சொத்துக்களைப் பரிபாலித்ததுடன், சமுதாயத்திலும் பெரும் ஆதிக்கத்தைப் பெற்றது. 1152 இல் போப்பாண்டவர் முதலாவது நோர்வேயக் கிறிஸ்தவ பிரதான குருவை நியமித்தார். அதன் பிரகாரம் முதலாவது நோர்வேயத் தேவாலயம் ஐரோப்பாவிலுள்ள ஏனைய கத்தோலிக்க தேவாலயங்களைப் போன்று ரோமாபுரியிலிருந்தே பரிபாலிக்கப்பட்டது.

1200 ம் ஆண்டுகள் அநேகமாக நோர்வேயின் சிறப்பான காலங்களாக அழைக்கப்படுகின்றன. சிறந்த கட்டிடங்கள் தேவாலயத்தாலும், அரசர்களாலும் நிர்மாணிக்கப்பட்டன. இவற்றில் சில தற்பொழுதும் உள்ளன. அரசனுடைய அரண்மனைச் சேவகத்திலும், தேவாலயங்கள் மற்றும் ஆச்சிரமங்களிலும் லத்தீன்

www.padippakam.com




FOTO: KNUDSENS FOTOSENTER

மத்தியகாலத்தைய சித்திரத்தையுடைய புராதன கம்பளம்.

எழுத்துக்களை அறிந்ததுடன், வாசிக்கவும் எழுதவும் கூடிய ஆட்கள் இருந்தார்கள்.

1300.ம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் சுமாராக 450.000 மனிதர்கள் மட்டுமே நோர்வேயில் வசித்தார்கள். 1349 இல் வந்த "Svartedauden" (கருமைச் சா) என்னும் தொற்றுவியாதி குடிமக்களில் அரைவாசிக்கு மேலானோரை அழித்தது. சுவாத்தியத்தில் குளிர் அதிகரித்ததுடன் அடிக்கடி உணவுப் பற்றுக்குறையும் ஏற்பட்டது. தூரத்திலிருந்த தென்திசை நாடுகளிலிருந்து தானியங்கள் இறக்குமதி செய்யவேண்டிய அவசியமும் ஏற்பட்டது. தானிய இறக்குமதியை மேற்பார்வை செய்த வெளிநாட்டைய வர்த்தகர்கள் பெரும் அதிகாரத்தைப் பெற்றதுடன் நோர்வேய அரசர்களும் அவர்களில் தங்கியிருந்தார்கள்.

நோர்வேக்கு அது வீழ்ச்சிக்காலமாக இருந்தது.




FOTO: KNUDSENS FOTOSENTER

மரத்தில் செதுக்கப்பட்ட வீக்கிங் காலத்தைய அனல் கக்கும் பாம்புத் தலை.

வடக்கத்தைய அரசகுடும்பங்களுக்கு மத்தியில் இருந்த திருமண உறவின் காரணமாகப் பல காலங்களாக நோர்வே, சுவீடன், டன்மார்க் ஒரே அரசரால் ஆளப்பட்டு வந்தது. நோர்வே முதலில் டன்மார்க்குடன் ஐக்கியமாக 400 வருடங்களுக்கு மேலாக இருந்தது. அதன்பின்னர் சுவீடனுடன் ஏறத்தாள 100 வருடங்களாக ஐக்கியமாக இருந்தது. அச்சமயம் முதலில் டானிய அரசர்களும் அதற்கடுத்து சுவீடிய அரசர்களும் நோர்வேயை ஆண்டார்கள்.

1537 இல் டானிய அரசன் கத்தோலிக்க கிறிஸ்தவ மதத்திற்குப் பதிலாக லூதுவப் புரொத்தெஸ்தாந்துக் கிறிஸ்தவ மதத்தை அரசாங்க மதமாக அறிமுகம் செய்யத் தீர்மானித்தான். நோர்வேய மக்கள் எச் சமயத்தை விரும்புகின்றார்கள் எனக் கேட்கப்படவில்லை.

டானிய மொழியே பாதிரிமார்களாலும் மற்றும் சகல அரசாங்க சேவகர்களாலும் பாவிக்கப்பட வேண்டியிருந்தது. ஆனால் எழுத்துமொழி டானியமானாலும் நோர்வேயப் பேச்சுமொழியும், நோர்வேயக் கலாச்சாரமும் தொடர்ந்தும் உயிர்வாழ்ந்தன.



படிப்பகம்

www.padippakam.com

அரசர்கள் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க விரும்பிய இயற்கைச் செல்வம் நோர்வேயிடம் இருந்தது. நோர்வேய மலைகளில் பல இடங்களில் வெள்ளி மற்றும் செம்பு ஆகிய உலோகங்கள் காணப்பட்டதுடன் இச் செல்வங்களைப் பிரயோசனப்படுத்துவதற்காக டானிய அரசர்கள் சுரங்கங்களையும் கட்டினார்கள். விவசாயிகள் சுரங்கத்தொழிலாளிகளானதுடன் குறைந்த ஊதியத்திற்குக் கடுமையாகவும் உழைத்தார்கள். மர மூலப்பொருட்களும் மீனும் கூட மற்ற நாடுகள் வாங்க விரும்பிய முக்கியமான நோர்வேயப் பொருட்களாகும். நோர்வேய விவசாயிகளும், மீன்பிடியாளர்களும் தமது பொருட்களுக்குக் குறைந்த பணத்தைப் பெற்ற அதே வேளையில் ஒரு சில வெளிநாட்டைய மற்றும் நோர்வேய வர்த்தகக் குடும்பங்கள் பெரும் சொத்துக்களைக் குவித்தன.

அச்சமயம் நோர்வேயச் சமுதாயத்தில் ஏழைகளுக்கும், பணக்காரர்களுக்குமிடையில் பெரும் பேதமிருந்தது.

1800 ம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் ஐரோப்பாவில் யுத்தம் நடந்தது. பெரிய அரசுகளுக்கு மத்தியிலான நிலைமை வடபகுதி நாடுகளிலான அபிவிருத்தியையும் பாதித்தது. 1814 இல் டன்மார்க் நோர்வேயைத் தன்னிடமிருந்து சுவீடனுக்கு வழங்கவேண்டியேற்பட்டது. டன்மார்க்குடனான ஐக்கியத்திற்கு முடிவு ஏற்பட்டது. ஆனால் நோர்வே சுவீடனுடன் ஐக்கியத்துவமானது. 1814 இல் நோர்வேயில் உடமையும், கல்வியும் உடையவர்களுடைய பிரதிநிதிகள் அரசியல் நிலைமையை விவாதித்து நாட்டிற்கு ஒரு அடிப்படைச் சட்டத்தை அமைக்கவேண்டி ஒன்று கூடினார்கள். 1814ம் ஆண்டு வைகாசி 17ந் திகதி அடிப்படைச் சட்டம் அமுலாக்கப்பட்டுக் கையொப்பமிடப்பட்டது. அதனால் நோர்வேயினுடைய தேசிய தினமாக வைகாசி 17ந் திகதி தற்பொழுது கொண்டாடப்படுகின்றது.

சுவீடனுடன் ஐக்கியமாக நோர்வே 1905 ம் ஆண்டு வரைக்கும் இருந்தது. ஆனாலும் தனது அடிப்படைச் சட்டத்தையும் தனது பாராளுமன்றத்தையும், மக்களால் தெரியப்பட்ட அதனுடைய பிரதிநிதிகளையும் கொண்டிருந்தது.

சுவீடனுடனான ஐக்கியத்துவம் 1905 ல் கலைக்கப்பட்டு நோர்வே மீண்டும் ஒரு சுதந்திரமான சுய நாடானது.

சர்வஜன வாக்கெடுப்பொன்றில் நோர்வேயின் அநேகமான குடிமக்கள் அரசாட்சியை விரும்பியதால் டானிய இளவரசர் "Carl" (கார்ள்) அவர்கள் அரசராக இருக்கும்படி வேண்டிக் கொள்ளப்பட்டார். அவர் 1905 இல் தனது ஆங்கில மனைவி "Maud" மற்றும் ஒரு வயது மகன் அலெக்ஸாந்தருடன் நோர்வேக்கு வந்தார். தகப்பன், மகன் இருவரும் நோர்வேய அரச பெயர்களை எடுத்து "Håkon" அரசராகவும் ஊளாவ் இளவரசராகவும் ஆனார்கள்.

நோர்வேய அமைப்பில் அரசருக்கு இன்று எவ்விதமான அரசியல் அதிகாரமும் இல்லை. ஆனால் சுதந்திரத்திற்கும், சுயாட்சிக்கும் ஒரு முக்கியமான சின்னமாக விளங்குகின்றார்.

நோர்வே முதலாம் உலக மகாயுத்தத்தில் கலந்து கொள்ளவில்லை. நோர்வேயின் சுதந்திரமும் சுயாட்சியும் 2 ம் உலக மகாயுத்தம் ஆரம்பிக்கும் வரை நிலைத்தன. 1940 இல் நாடு ஜேர்மனியால் ஆக்கிரமிக்கப்பட்டது. ஜேர்மனியில் அடொல்ப் ஹிட்லரும் அவனது நாஸிக் கட்சியும் பதவிக்கு



படிப்பகம்

www.padippakam.com

வந்தன. யர்மான்ஸ்க் இனத்தைத் தவிர்ந்த ஏனைய சகல இனத்தையும் சேர்ந்த மனிதர்கள் தரம் குறைந்தவர்களாக ஹிட்லர் கருதினன். விசேடமாக யூதர்கள், சிகொய்னர்கள் போன்ற சில மக்களினங்கள் பின்தொடரப்பட்டுத் துன்புறுத்தப்பட்டன. நாஸிகள், யர்மான்ஸ்க் இனத்தைச் சேர்ந்த மக்கள் அதிகாரத்தை வைத்திருக்கக் கூடியதாக ஜேர்மனியை ஒரு சாம்ராஜ்யமாக்க விரும்பி நாடு விட்டு நாடாகத் தாக்கினர்.

உலகப்படத்தில் நோர்வேயின் இருப்பிடம் ஹிட்லருக்கு நாட்டின் மேல் அதிகாரம் செய்வதற்குப் பெரும் ஆர்வத்தைக் கொடுத்தது. நோர்வேயிலிருந்து ஜேர்மானிய ஆகாயவிமானங்களும் கப்பல்களும் முழு வடகடலையும் மேற்பார்வையிட முடிந்ததுடன் நோர்வேயிலிருந்து இங்கிலாந்தையும் தாக்க முடிந்தது. நோர்வேயிடம் பலம் குன்றியதோர் தற்பாதுகாப்பு இருந்தமையால் இராணுவ எதிர்ப்பை விரைந்து கைவிடவேண்டியேற்பட்டது. நோர்வேய அரசனும் அரசாங்கமும் இங்கிலாந்திற்குத் தப்பியோடி, ஜேர்மானியர்களுக்கான எதிர்ப்பை அங்கிருந்து தொடர்ந்தனர். ஒரு தொகை நோர்வேயர்கள் சுவீடனுக்குத் தப்பியோடினர். ஒரு சிலர் ஐக்கிய அமெரிக்கா, கனடா மற்றும் இங்கிலாந்திற்கு இராணுவப் பயிற்சி பெறுவதற்காகப் பயணமானர்கள். ஆனல் பெரும்பாலான நோர்வே மக்கள் முழு யுத்தத்தின் பொழுதும் நோர்வேயிலேயே தங்கியிருந்ததுடன் பலர் எதிர்ப்போராட்டத்தில் சுறுசுறுப்பாகவும் பங்கேற்றனர். யுத்தம் 5 வருடங்கள் நிலைத்தது.

17ந் திகதி வைகாசி 1814 ல் நோர்வேய அடிப்படைச் சட்டம் அங்கீகரிக்கப்பட்டு எயிட்ஸ்வொல்லில் கையொப்பம் இடப்பட்டது. ஒஸ்கார் வர்கலாண்டினது சித்திரம்.



FOTO: SIGURDSØN, FOTO



படிப்பகம்

www.padippakam.com



FOTO: NTB

1905 ல் இராணி மவுட், முடிக்குரிய இளவரசர் ஊளாவ் மற்றும் மன்னர் ஹோக்கோன். தற்பொழுது மன்னராகவிருக்கும் ஹரால்டினது தந்தையே முடிக்கு உரிய இளவரசர் ஊளாவாகும்.



FOTO: NTB

ஒஸ்லோவிலுள்ள பாராளுமன்றம்.

யுத்தத்தின் பொழுது சுமாராக 8.000 ம் நோர்வேயர்கள் கைது செய்யப்பட்டு ஜேர்மனியிலிருந்த கைதிகள் முகாமிற்கு அனுப்பப்பட்டனர். பல எதிர்ப்பாளர்கள் கொடுமைப்படுத்தப்பட்டுக் கொல்லப்பட்டனர். நகரங்கள் குண்டு போடப்பட்டு, எரிக்கப்பட்டன. பத்திரிகைகளும் வானொலியும் தணிக்கை செய்யப்பட்டன. நாஸி முறையை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்யும் பட்சத்தில் கடுமையான தண்டனையளிக்கப்பட்டது. ஆனாலும் மக்கள் மிகவும் சாமர்த்தியமுள்ளவர்களாக இருந்ததுடன் முடிந்த வரையில் ஜேர்மானிய ஆக்கிரமிப்பாளர்களுக்குப் பிரச்சினைகளையும் அளித்தனர்.

யுத்தத்தின் பொழுது ஜேர்மனிக்கு எதிராக நின்ற மற்றைய நாடுகளிடமிருந்து (நேச நாடுகள்) நோர்வே ஆதரவைப் பெற்றது.
ஐக்கிய அமெரிக்கா, சோவியத் மற்றும் இங்கிலாந்தால் படிப்படியாக



படிப்பகம்

www.padippakam.com

ஜேர்மானியர்களை சக்தியுடன் எதிர்த்துத் தாக்கவும் முடிந்தது.

நோர்வேயின் விடுதலை, சோவியத்தினது இராணுவ வீரர்கள் வட நோர்வேக்குள் (Finnmark) நுழைந்ததுடன் ஆரம்பமானது. ஜேர்மானியர்கள் தெற்கு நோக்கித் துரத்தப்பட்டனர். ஆனல் அவர்கள் புறப்படுவதற்கு முன்பாகச் சகல வசிக்கும் வீடுகளை எரித்து, வீட்டு மிருகங்களைக் கொன்று, மீன்பிடி வள்ளங்கள் மற்றும் உற்பத்திச் சாதனங்களையும் அழித்தனர். சுமாராக 50.000 குடிமக்கள் தமது இல்லங்களை விட்டுத் தெற்குநோக்கிப் புறப்படும்படி பணிக்கப்பட்டனர்.

பலர் மறுத்ததுடன் அதற்குப் பதிலாக மலைகளுக்குத் தப்பியோடிச் சென்று அங்கு குடிசைகளிலும் குகைகளிலும் ஒழித்திருந்த அதே வேளையில் நேச நாடுகளால் நோர்வேயை விடுதலை செய்யமுடியும் எனவும் காத்திருந்தனர்.

8 ந் திகதி வைகாசி 1945 இல் ஜேர்மனி சரணடையவேண்டி வந்தது. நோர்வே மீண்டும் ஒரு சுதந்திர நாடானது. ஆனல் அது ஒரு வறிய, பாழடைந்த நாடாகவிருந்தது. வசிப்பிடங்கள், தொழிற்சாலைகள், பாடசாலைகள் மற்றும் வைத்தியசாலைகள் அழிவிலிருந்தன. சுமாராக 10.000 நோர்வேயர்கள் உயிரிழந்தனர். யுத்தம், ஜேர்மனியர்களுக்கு ஆதரவளித்தவர்களின் மேல் வெறுப்பையும் பழிவாங்கும் எண்ணத்தையும் படைத்திருந்தது. யுத்தத்தின் பொழுது மக்கள் நடந்து கொண்ட விதம் விரைவாக மறந்துவிடப்படவில்லை.

விடுதலைக்குப் பின்னல் வந்த முதலாவது வைகாசி 17 ஒரு விசேடமான கொண்டாட்ட தினமானது. மீண்டும் நோர்வேயக் கொடியைப் பாவிக்கவும், நோர்வேயத் தேசியகீதத்தைப் பாடவும் அனுமதி கிடைத்தது. மீண்டு திரும்பிய அரசகுடும்பம் கோலாகலமாக வரவேற்கப்பட்டது.

2 வது உலகமகாயுத்தத்தின் சமயம் பின்மார்க்கிலிருந்து. யேர்மானியர்கள் சகல வதிவிடங்களையும் எரித்து, வீட்டு மிருகங்களை அழித்ததுடன் மீன்பிடி வள்ளங்களையும் சேதப்படுத்தினர்.



FOTO: SAMFOTO



படிப்பகம்

www.padippakam.com




FOTO: NTB

யுத்தத்தின் சமயம் அரசர் காட்டிய பலமான எதிர்ப்பு நோர்வேய மக்களின் மத்தியில் தைரியத்தைத் தூண்டியிருந்தது. ஆக்கிரமிப்பை அனுபவித்த பின்னுல் நோர்வேயர்களுக்கு வைகாசி 17 மேலும் முக்கியமானதொரு நினைவு நாளானது. அந்நாள் சமாதானத்திற்கும் சுதந்திரத்திற்குமானதொரு நன்றிக் கொண்டாட்ட நாளானது.

யுத்தத்திற்கு முன்பும் நோர்வே ஒரு வறிய நாடாக இருந்திருந்தது. யுத்தத்தின் சமயம் அது மேலும் வறுமையானது. மக்கள் பலர் தமது உடமைகள் யாவற்றையும் இழந்திருந்தனர். அவர்கள் வீடு, உடை மற்றும் உபகரணங்களைத் தமக்குப் பெற்று மீண்டும் புதிதாக ஆரம்பிக்கவேண்டியிருந்தது. நியாயமான பங்கீடு நடைபெறுவதைக் கவனித்துக் கொள்வதற்காக அரசாங்கம் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனையில் கடுமையான கண்காணிப்பை அறிமுகப்படுத்தியது.

புனருத்தானத்தில் எல்லோரும் கட்டாயமாகப் பங்கெடுக்கவேண்டி ஏற்பட்டது. தன்னையும் தனது குடும்பத்தையுமே பற்றிச் சிந்திப்பதற்கு ஒருவருக்கும் அனுமதி கிடைக்கவில்லை.

மேலும் சிறந்த வாழ்க்கைத் தராதரத்தை உடைய சமுதாயத்தையும், மக்களிடையே மேலும் நியாயம் மற்றும் சமத்துவத்தை உருவாக்குவதுமே அந்நேரத்தைய பொது அரசியற் கொள்கையாகவிருந்தது.

2 வது உலகமகாயுத்தத்தின் இறுதியில் வட நோர்வேயிலிருந்து. நோர்வே ஒரு வறிய, சேதப்படுத்தப்பட்ட நாடாகவிருந்தது.



படிப்பகம்

www.padippakam.com




1940 ல் மன்னர் ஹோக்கோனும் முடிக்குரிய இளவரசர் ஊளாவும் யேர்மானியர்களிடமிருந்து தப்பியோடி மோல்டையிலுள்ள காட்டில் புகலிடம் தேடினுர்கள். யுத்தத்தின் பொழுது நோர்வேய எதிர்ப்பு அவாவிற்கான அடையாளமொன்ருக இப் படம் அமைந்தது.




17 வைகாசி 1945 ஒஸ்லோவிலுள்ள பிரதான வீதியிலிருந்து.

கல்வி, தொழில் மற்றும் சுகாதாரசேவை ஆகியவற்றில் எல்லோரும் சம உரிமை பெறவேண்டும். மேலும் சுயமாகத் தம்மைக் கொண்டு நடத்த முடியாதவர்களுக்கு அரசாங்கம் பொருளாதார உதவி வழங்கவேண்டும். அரசாங்கத்திடமிருந்து கூடிய கண்காணிப்பையும், தனிப்பட்ட சொத்தைக் கட்டியெழுப்புவதில் குறைந்த சுதந்திரத்தையும் அதனுல் எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. 1945.ற்குப் பின்னுல் நோர்வேயர்கள் சமாதானமாகவும் சுதந்திரமாகவும் வாழ்ந்திருக்கின்றுர்கள்.



படிப்பகம்

www.padippakam.com

வல்லரசுகளுக்கு இந்நாடு முக்கியமான வெற்றியளிக்கக்கூடியதொரு பகுதியென்பது யுத்தகாலத்தில் வெளிப்படையாகியிருந்தும் நோர்வே பாரதுாரமான சர்வதேச முரண்பாடுகளினுள் சேர்க்கப்படவில்லை. நோர்வேக்குச் சோவியத் அளித்த உதவியின் காரணமாக விடுதலைக்குப் பின்னல் சோவியத்துடனுன உறவு நன்ருகவிருந்தது. ஆனுல் 40 ம் ஆண்டுகளின் இறுதியிலான சோவியத்தின் வெளிநாட்டு அரசியற்கொள்கை நோர்வேய அரசியல்வாதிகளைப் பயமுறுத்தியது.

பல அரசியல்விவாதங்களின் பின்னுல் 1949 இல் நோர்வே "நேட்டோ" விற் (வட அத்லாந்திக் உடன்படிக்கைக் குழு) சேர்ந்தது. அத்துடன் பொருளாதார ரீதியாகவும் நோர்வே ஐக்கிய அமெரிக்கா மற்றும் வேறு மேற்கத்தைய நாடுகளுடனுன தொடர்பில் பெரிதும் தங்கியிருந்தது. யுத்தத்திற்குப் பின்னுலான வருடங்களில் நோர்வே ஐக்கிய அமெரிக்காவிடமிருந்து பொருளாதார உதவி பெற்றது. அது ஐக்கிய அமெரிக்காவினது வர்த்தக நலன்களுக்கேற்ப நோர்வே தன்னை அனுசரித்துக் கொள்ளக் காரணியாகவிருந்தது.

1950 – 1980 ம் வருடங்களுக்கிடையில் நோர்வேயில் வாழ்க்கைத் தராதரம் தொடர்ச்சியாகச் சிறப்புற்றது. அப்பொழுது வேலையின்மை குறைவாகவும், சமுதாயத்தை எப்படி ஆளுவது என்பதிற் குறைவான முரண்பாடுகளும் இருந்தன. தொழிற்சாலைகளைக் கட்டுவதிலும் உற்பத்தியைக் கூட்டுவதற்காக

வைகாசி 17
ஊர்வலம்




FOTO: KNUDSENS FOTOSENTER



படிப்பகம்

www.padippakam.com

நவீன தொழில்நுட்பத்தை உபயோகத்திற்கு எடுத்துக்கொள்வதிலும் மற்றும் எல்லோருக்கும் வேலை வழங்குவதிலும் அதிக சிரத்தையெடுக்கப்பட்டது.

யுத்தத்திற்குப் பின்னுல் விரைவாக மேற்கொள்ளப்பட்ட தொழில்மயமாக்குதல் நோர்வேதியச் சமுதாயத்தை மாற்றிவிட்டது. நகரங்களும் அடர்த்தியான இடங்களும் அதிகரித்ததுடன் பல விவசாயிகளும் மீன்பிடியாளர்களும் நகரவாசிகளாகிவிட்டனர்.

நோர்வேயில் பல ஆறுகளும் நீர்வீழ்ச்சிகளும் இருப்பதனுல் அதிக மின்சாரசக்தியை உற்பத்திசெய்ய முடிகின்றது. 60 ம் ஆண்டுகளின் கடைசிப்பகுதியில் கரையோரத்திற்கு அப்பால் சமுத்திரத்தின் அடியில் எண்ணெய்யும் வாயுப்பொருளும் கண்டுபிடிக்கப்பட்டது. இவ்வுற்பத்தி இன்று பெரும் வருமானங்களைக் கொடுக்கின்றது. ஆனுல் எண்ணெயுற்பத்தியின் அபிவிருத்தி பிரச்சினைகளையும் அத்துடன் ஏற்படுத்தியுள்ளது. எண்ணெய்த் தொழிலாளர்களுக்கான சிறந்த ஊதியம் மற்றைய தொழிற்சாலைகளும் உயர்ந்த சம்பளத்தை வழங்கவேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியது. அதனுல் பல பொருட்களின் விலைகள் ஏறியதுடன் உலகச்சந்தையின் வர்த்தகத்தில் போட்டியிடுவதிலும் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.

70 ம், 80 ம் ஆண்டுகளில் நோர்வேயில் செழிப்பும் வாழ்க்கைத் தராதரமும் பெருகியது. பலர் சிறந்த வீடுகளைத் தமக்குக் கட்டினர்.

70 ம் மற்றும் 80 ம் ஆண்டுகளில் நோர்வேயில் செழிப்பும் வாழ்க்கைத் தராதரமும் கூடியதுடன் பல நோர்வேயர்கள் கூடிய பாவனைக்கும் பழக்கப்பட்டார்கள். அத்துடன் வங்கிகளிலிருந்து கடன் பெறுவதும் சுலபமாகவிருந்தது. பல மனிதர்கள் நல்ல வசிப்பிடங்களைக் கட்டியதுடன் புதிய நிறுவனங்களையும் ஆரம்பித்தனர்.

பொருளாதார முன்னேற்றம் 80 ம் ஆண்டுகளின் நடுப்பகுதி வரை நிலைத்தது. பல புதிய நிறுவனங்கள் போட்டியிட முடியாமல் மூடப்படவேண்டிய அவசியத்திற்குள்ளானதும் தெளிவானதொன்று. ஆதலினுல் பலருக்கு வேலையின்மை ஏற்பட்டதுடன் மக்களின் வருமானமும் குறைந்தது.




FOTO: EIVIND ABUSDAL



படிப்பகம்

www.padippakam.com



FOTO: KNUDSENS FOTOSENTER

வட கடலிலுள்ள எண்ணைப் பீடம்.

தொடர்ந்தும் பல நிறுவனங்களைக் குறைக்கவேண்டிய நிர்ப்பந்தமேற்பட்டதால் மேலும் பலர் வேலையையும் வருமானத்தையும் இழந்தனர். அதன் காரணமாக அரசாங்கத்திற்கு வரியால் வரும் வருமானம் குறைந்ததுடன் பிரச்சினைகளையுடைய மக்களுக்கு உதவுவதற்கான செலவும் கூடியது.

1992 இல் நோர்வேயில் பெரும் வேலையில்லாத் திண்டாட்டம் உள்ளதுடன் பல மக்களுக்கு பொருளாதாரப் பிரச்சினைகளும் உள்ளன. பணக்காரர்களுக்கும் வறியவர்களுக்குமிடையிலான பேதம் மீண்டும் அதிகரிக்கின்றது. பொருட்களினதும் சேவைகளினதும் விலைகள் உயர்ந்தவையாக இருப்பதுடன் உதவி தேவைப்படும் சகலருக்கும் உதவுவதில் அரசாங்கத்திற்குப் பிரச்சினைகளும் உண்டு. சகல குடிமக்களுக்கும் சமுதாயத்தினுடைய சேவைகளில் சம உரிமைகளுண்டு என்ற சட்டங்கள் மாற்றப்படவில்லை. ஆனால் உதவி தேவைப்படும் சகலருடனும் ஒப்பிடும் பொழுது பணம் உழைத்து, வரி செலுத்தும் மக்கள் மிகவும் குறைந்துவிட்டனர். நோர்வே தொடர்ந்தும் ஒரு பொதுநலன் பேணும் நாடாக இருப்பதாயின் வேலையில்லாத் திண்டாட்டமே நோர்வேய அரசியல்வாதிகள் அவசியம் தீர்க்கவேண்டிய பெரும் பிரச்சினையாகும்.

உலகத்திலுள்ள மற்றும் பல நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, குடிமக்களில் பெரும்பாலானோருக்கு நோர்வே வசிப்பதற்குச் சிறந்ததொரு நாடு.



படிப்பகம்

www.padippakam.com



## புவியியல்

நோர்வே பூமத்தியரேகையிலிருந்து வடக்கே 58 ம் மற்றும் 71 ம் பாகைகளுக்கு மத்தியில் உள்ளது. துருவ வட்டம் கிட்டத்தட்ட நாட்டின் நடுப்பகுதியை ஊடுருவிச் செல்கின்றது. குடாநீரோட்டம் (gulf stream) எனப்படும் ஒரு வெட்பமான சமுத்திர நீரோட்டம் கரையோரமாக வடக்கு நோக்கிச் செல்வதுடன் சுவாத்தியத்தை மிகவும் இதமாக்குவதால் நாடு வடதுருவத்திற்கு மிக அருகிலிருந்தும் மக்களால் இங்கு வசிக்க முடிகின்றது.

நோர்வேயில் வடக்கிற்கும் தெற்கிற்குமிடையில் பெருமளவில் வெட்பபேதமில்லே. ஆனல் கரையோரத்திற்கும் நாட்டின் உட்பகுதிக்குமிடையில் சுவாத்தியத்தில் பெரும் பேதமுண்டு. கரையோரத்தில் அநேகமாக மழை, காற்றுடன் காலநிலேயும் விரைந்து மாறுகின்றது. குளிர்காலத்தில் (மார்கழி – மாசி) –10 சென்ரிகிரேட் பாகையிலும் பார்க்க அபூர்வமாகவே குளிரும்.

தெற்கு நோர்வேயிலுள்ள கரையோரப் பகுதியிலிருந்து பனிக்காலப் படம்.




FOTO: EIVIND ABUSDAL



படிப்பகம்

www.padippakam.com




நோர்வேப் படம்
ஆகாயமார்க்கப்
போக்குவரத்தில் தூரங்கள்




பனிக்காலத்தில்
மலையிலிருந்து.

வசந்தகாலத்தில் (ஆனி - ஆவணி) +25 சென்ரிகிரேட் பாகையிலும் பார்க்க அபூர்வமாகவே வெட்பமாகவிருக்கும்.

கரையோரத்திலும் பார்க்க உள்நாட்டில் காலநிலை நிலையானது. குளிர்காலத்தில் அங்கு வெட்பம் -30 தொடக்கம் -35 சென்ரிகிரேட் பாகை வரைக்கும் கூடச் செல்லலாம். அதிகமான உறைபனி விழும் சாத்தியக்கூறு இருப்பதுடன் உறைபனியும் அநேகமாகச் சித்திரை - வைகாசி வரை இருக்கும். வசந்தகாலத்தில் சிலசமயங்களில் வெட்பநிலை +30 சென்ரிகிரேட் பாகைக்கும் மேலாக இருப்பதுடன் சாதாரணமாக அதிக மழை இருக்காது.



படிப்பகம்

www.padippakam.com



FOTO: TROND VIDAR VEDUM

நாட்டுப்புறத்தில் வசந்தகாலம்.

நோர்வேயின் பரப்பளவு 324.000 கிலோமீட்டர். சனத்தொகை 4,2 கோடி. நோர்வேயர்களிடம் எவ்வளவு இடம் உள்ளதென்பதை விளங்கிக்கொள்ள நோர்வேயைப் போன்று அதே பரப்பளவுள்ள சில நாடுகளை நாம் ஒப்பிட்டுப் பார்க்கலாம். வியட்நாம் கிட்டத்தட்ட ஒரேயளவாக இருப்பதுடன் அதனிடம் 62 கோடி குடிமக்களுண்டு. அதேபோன்றே ஜப்பானிடம் 121 கோடி குடிமக்களுண்டு.

நோர்வேயில் அதிக இடம் காடும் மலையுமே. பரப்பளவில் சுமாராக 4% மட்டுமே விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றது. பரப்பளவில் சுமாராக 0.5% பட்டணங்களும் சனநெருக்கமான இடங்களுமாகும். குடிமக்களில் சுமாராக 70% மானோர்கள் இங்கு வசிக்கின்றார்கள். அதி பெரிய பட்டணமானது சுமாராக 460.000 குடிமக்களையுடைய தலைநகரமான ஒஸ்லோவாகும்.

## இயற்கையுடனான நோர்வேயர்களுடைய உறவு

குறுகிய காலத்திற்கு முன்பே நோர்வே ஒரு கமத்தொழில் நாடானது. பட்டணங்களிலும் சனநெருக்கமான இடங்களிலும் இன்று வசிக்கும் மக்களில் அநேகம்பேர் நாட்டுப்புறத்தில் வளர்ந்தவர்களாகவோ அன்றித் தமது உறவினர்களை அங்கு உடையவர்களாகவோ இருக்கின்றார்கள். இதனை நவீன பட்டணச்சமுதாயத்திலும் கூட மனோபாவத்திலும் பழக்கவழக்கங்களிலும் பல



படிப்பகம்

www.padippakam.com

விதங்களில் காணக்கூடியதாக இருக்கின்றது.

அநேகமான நோர்வேயர்கள் காடு, மலை, கடல் அல்லது பரந்த வெளிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு வாழ்கின்றார்கள். பட்டணங்களில் வசிப்பவர்களும் கூடச் சாதாரணமாக மரங்களும் பிராணிகளும் நிறைந்த பொதுவிடங்களுக்குக் கிட்டிய தூரத்தில் இருக்கின்றார்கள்.

பண்படுத்தப்படாத இயற்கை இடங்களில் அநேகமானவை அரசாங்கத்தின் உடமையாக இருப்பதுடன் அங்கு சகலரும் சுதந்திரமாகச் செல்லமுடியும். அத்துடன் பண்படுத்தப்படாத தனியாருக்குச் சொந்தமான இடங்களுக்குச் செல்வதற்கும் சாதாரணமாக அனுமதியுண்டு. நாட்டிலுள்ள அநேகமான இடங்களில் தானாகவே வளரும் பெரிப்பழங்களையும் காளான்களையும் பிடுங்குவதற்கு அனைவருக்கும் அனுமதியுண்டு. ஒருவருக்கும் சொந்தமில்லாத பிரதேசங்களில் வேட்டையாடவோ அன்றி மீன்பிடிக்கவோ விரும்புபவர்கள் விசேட சட்டங்களின் பிரகாரம் அரசாங்கத்திற்கு நிலுவையொன்றைச் செலுத்தவேண்டும்.

நோர்வேயில் மக்கள் பண்டைக்காலத்தில் வேட்டையாடவும், மீன்பிடிக்கவும், இயற்கையிலிருந்து பொருட்களைப் பிரயோசனப்படுத்தவும் பழக்கப்பட்டவர்கள். உயிர்தப்பி வாழ்வதற்கு இது இப்பொழுது அவசியமற்றது. ஆனால் அதிகமான நோர்வேயர்கள் இயற்கையை இன்னமும் இந்த விதத்தில் பிரயோசனப்படுத்துவதில் பெரும் உவகையடைகின்றார்கள்.

அநேகமான நோர்வேயக் குழந்தைகள் வெளி வாழ்க்கையை விரும்பவும், இயற்கையை மதிக்கவும் ஆரம்பத்திலேயே பயிற்றப்படுகின்றார்கள். விடுமுறைகளிலும் லீவுநாட்களிலும், குழந்தைகளும் வளர்ந்தோரும், குடும்பங்களும் தனியாட்களும் காடு, மலை அல்லது கடலுக்குச் செல்வது வழக்கம்.



நண்டு பிடிக்கும் சமயம்.

இயன்றவரை அடிக்கடி செல்வதற்காகக் குடிசையொன்றையோ அல்லது வசந்தகாலப் பாவனைக்கான வீடொன்றையோ அநேகமான நோர்வேயர்கள் வைத்திருக்கின்றார்கள். இயற்கைக்கு மீண்டும் செல்வதற்குக் குடிசைவாழ்க்கை சந்தர்ப்பமளிப்பதுடன் பட்டிணங்களிற் காணமுடியாத சத்தமின்மையையும் அமைதியையும் பெறவும் வழிவகுக்கின்றது. மக்கள் நாளாந்தம் சீவிப்பதுபோன்றில்லாது பழங்கால வாழ்க்கை வாழக்கூடியதாகக் குடிசைகள் அநேகமாகக் கட்டப்பட்டும் பழைய விவசாயிகள் மரபில் தளபாடம் அமைக்கப்பட்டும் உள்ளன.

நோர்வேயிலும் கூட இயற்கையும் சுற்றாடலும் நாட்டின் எல்லைகளுக்கு உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் உள்ள தொழிற்சாலைகளிலிருந்து வரும் அசுத்தத்தினால் தற்பொழுது பயமுறுத்தப்படுகின்றன. கடந்த வருடங்களது பல சுற்றாடல்-விபத்துக்கள் மக்களைப் பயமுறுத்தியுள்ளன.
நோர்வேயிலும் மற்றைய நாடுகளிலும் சுற்றாடலை அசுத்தமாக்குவோருக்கு எதிராகப் பலர் ஆட்சேபிக்கின்றனர். பாடசாலைகளில் சுற்றாடல் பாதுகாப்பு ஒரு முக்கிய பாடமாகியிருப்பதுடன் விசேடமாகப் பல இளம் பருவத்தினர் இயற்கையைப் பாதுகாப்பதற்காகச் சுறுசுறுப்பாகச் செயலாற்றுகின்றனர்.

எல்லா நோர்வேயர்களும் இயற்கையில் ஒரேமாதிரி ஈடுபாடு கொண்டிருக்காவிட்டாலும் இந்நாட்டிற் கூடுதலானோருக்கு இயற்கை மற்றும்



படிப்பகம்

www.padippakam.com

வெளிப்புறவாழ்க்கையில் மிகுந்த விருப்புண்டு என்பதை அறிந்து வைத்திருத்தல் அவசியம். இயற்கைக்கு மதிப்புக் கொடுக்காது வெளிப்புறத்தில் குப்பையை வீசும் அல்லது மிருக மற்றும் தாவரவாழ்க்கைக்குக் கெடுதி விளைவிக்கும் ஒருவர் மிகுந்த எதிர்ப்பை எதிர்பார்க்கலாம்.

வெளிப்புறத்தில் நடத்தக்கூடிய ஓய்வுநேர நடவடிக்கைகள் நோர்வேயிற் புகழ்வாய்ந்தவை. தற்பொழுது மோட்டார்வண்டி மற்றும் தங்குதற்கான வாகனம் (campingvogn) ஆகியனவற்றைப் பாவிப்பது அதிசாதாரணமானாலும் வசந்தகாலத்தில் இன்றும் பலர் கூடாரம் மற்றும் பொருட்கள் கொண்டுசெல்லும் முதுகுப் பையுடன் (ryggsekk) கால்நடைச் சுற்றுப்பிரயாணம் செய்கின்றார்கள். ஓய்வுநேரத்தைப் பொழுதுபோக்கு-மீன்பிடித்தல், படகு செலுத்தல் ஆகியவற்றிற்குப் பிரயோசனப்படுத்துவதற்குச் சிலர் கூடுதலாக விரும்புகின்றனர். சைக்கிளோட்டம், மலையேறுதல் அல்லது அறிவதற்குச் சிரமமான நிலப்பரப்பை அதன் படம் மற்றும் திசையறிகருவி பாவித்து அறிவதற்குப் பயிலுதல் போன்றவற்றை மற்றவர்கள் செய்கின்றார்கள்.

பனிக்காலத்தில் அநேகமானோர் பனிச்சறுக்கல் செய்வதற்கு விரும்புகின்றனர். பலதரப்பட்ட பனிக்கால விளையாட்டுக்களை நடத்தும் பொருட்டுப் பலர் பனி மற்றும் உறைபனி ஆகியனவற்றிற்கு ஆசைப்படுகின்றனர்.

நோர்வேயில் உடற்பலம், சகிப்புத் தன்மை மற்றும் நல்ல உடற்கட்டுப்பாடு ஆகியன உயர்வாகக் கணிக்கப்படுகின்றன. குடிமக்களிற் பெரும் பகுதியினர் முழுவருடமும் ஒழுங்காகப் பயிற்சி செய்வதுடன் பலர் விளையாட்டுக் கழகங்களிலும் அங்கத்தவர்களாக உள்ளனர்.



FOTO: EIVIND ARUSDAL

வசந்தகாலத்தின் பொழுது மலையில் கூடாரம் அடித்துத் தங்கும் சமயம்.

பனிக்காலத்தில் பனிச்சறுக்கலின் சமயம்.



FOTO: KNUDSENS FOTOSENTER



படிப்பகம்

www.padippakam.com



FOTO: RUNE LISLERUD, SAMFOTO

பலருக்கு மலையில் குடிசைகளுண்டு.

எல்லாவிதமான விளையாட்டுப் போட்டிகளும் பிரபல்யமானவை. ஆனல் பயிற்சி செய்பவர்களில் அநேகமானேர் தம்மை நல்ல அமைப்பில் வைத்திருக்க விரும்புவதனலும், பயிற்சி செய்யும் மற்றவர்களுடனன தொடர்பினலுமே அதைச் செய்கின்றனர். விளையாட்டினூடாகப் பலருடன் அறிமுகமாவதும், நண்பர்களைப் பெறுவதும் இலகுவாகும். அத்துடன் உதாரணமாக ஓடும்பொழுதும், சைக்கிளோடும் பொழுதும் அல்லது பனிச்சறுக்கல் செய்யும் பொழுதும் பலர் தனியாகப் பயிற்சியில் ஈடுபட்டிருப்பதையும் சர்வசாதாரணமாகக் காணலாம்.

## சீதோஷ்ணநிலை, உடை மற்றும் வீடு

நோர்வேயில் காலநிலைக்கு ஏற்றவாறு உடையணிவதற்கு ஒருவர் பயிலுதல் மிகவும் முக்கியம். மழையும் காற்றுமாக இருக்கும் பொழுது மழையில் நனையாத, காற்றுப் புகாத வெளிப்புற ஆடைகளும், கால்களில் மூடப்பட்ட சப்பாத்து அல்லது உயரமான றபர்சப்பாத்துக்களும் (støvler) தேவை.
வெப்பம் தாழ்வாக இருக்கும் பொழுது உட்புறமாகத் தோலுடன் சேர்த்துப் பருத்தியாடைகளும், வெளிப்புறமாகக் கம்பளியால் செய்த ஆடைகளும் அணிவதே சிறந்தது. பனிக்காலத்தில் பொங்கு-வஸ்திரத்தினல் (boblestoff) (பொலியெஸ்தர், இலகுவான பறவையிறகு அல்லது திணிப்பதற்குப் பாவிக்கப்படும் ஒருவித பொருளை இடையிற் கொண்ட இரட்டைப்பட்டு வஸ்து) செய்யப்பட்ட வெளியாடையைப் பாவிப்பதே சாதாரணம். செயற்கைப் பொருளாலான இறுக்கமான உடைகளை ஒருவர் பாவிக்கும்



FOTO: BENTE HÅTUFT KORSNES

பனியில் விளையாடுமொரு சிறுமி.



படிப்பகம்

www.padippakam.com

திருமணம் செய்திருக்கவில்லையென்பதற்கும் உத்தரவாளிகளே அத்தாட்சியாளராவர். திருமணம் மக்கள்பதிவுக்காரியாலயத்தில் பதியப்பட்டு, திருமணம் செய்பவர்கள் மணஅத்தாட்சிப்பத்திரமொன்றையும் பெறுவர்.

திருமணமொன்றனது ஒருவரிலொருவர் அன்பு ஏற்பட்ட இரு நபர்களுக்கிடையிலானதொரு தனிப்பட்ட உடன்படிக்கையாகும். ஆனல் அது அத்துடன் சட்டரீதியாகக் கட்டுப்பட்டதொரு உடன்படிக்கையுமாகும். இதன் பொருள் நோர்வேயில் தம்பதிகள் இருவரும் ஒருவரையொருவர் பொருளாதார ரீதியில் பராமரிக்கும் பொறுப்பு உடையவர்கள். அவர்களுக்குக் குழந்தைகளுக்கான பொதுவான பெற்ரேர் உரித்து உண்டு. விசேடத் தனியுரிமை பற்றி அரசாங்க அலுவலகத்தில் பதிவுசெய்யப்பட்ட எழுத்து மூலமான உடன்படிக்கை செய்யப்பட்டிருக்காது விட்டாலொழியக் குடும்பத்தின் உடமையில் அவர்கள் சம உரித்துடையவர்கள். குடும்பத்தின் கடனில் அவர்கள் இருவருக்கும் ஒரேயளவான பொறுப்புண்டு. தம்பதிகளில் எவரும் மற்றவரின் அனுமதியின்றிப் பொதுச் சொத்தை விற்கவோ அன்றி வங்கியிற் பெரிய கடனை எடுக்கவோ முடியாது. குடும்பத்தில் தீர்மானம் செய்வதற்குத் தம்பதிகளில் எவருக்கும் ஒருவரைவிட மற்றவருக்குக் கூடிய உரிமையில்லை.

தம்பதிகள் பிரிந்துசெல்ல விரும்பினல், அவர்கள் விவாகரத்துக் கோரவேண்டும். அவர்கள் தொடர்ந்தும் திருமணப் பந்தத்திலில்லை என்ற

காதற் சோடியொன்று



FOTO: OLE A. BUENGET/SAMFOTO



படிப்பகம்

www.padippakam.com

பத்திரத்தைப் பெறுவதற்கு ஒருவருடம் காத்திருக்க வேண்டும். காத்திருக்கும் நேரத்தில் தம்பதிகள் சேர்ந்து வாழுதல் கூடாது. வேறொருவருடன் திருமணம் செய்வதற்கும் அவர்களுக்குச் சட்டமில்லை. விவாகரத்தொன்றின் பொழுது சொத்தை அவர்கள் எப்படிப் பகிர்வதென்றும், குழந்தைகள் எவருடன் சேர்ந்து வசிப்பதென்றும் எழுத்து மூல உடன்படிக்கையொன்று அமைக்கப்படும். குழந்தைகள் காலத்தின் அரைப்பகுதியில் ஒவ்வொருவருடனும் வசிப்பதெனச் சில பெற்றோர்கள் உடன்பாடு அமைத்துக்கொள்கின்றார்கள். விவாகரத்தொன்றிற்குப் பின்னால் பெற்றோர்களில் எவருடன் தாம் சேர்ந்து வசிக்க விரும்புவதாகப் 12 வயதிற்கு மேற்பட்ட குழந்தைகள் சுயமாகவே தெரிவிக்கலாம். பெற்றோர்கள் இணங்காதுவிட்டால் நீதிமன்றமொன்று அல்லது மாகாண அரசாங்க அதிபர் குழந்தைக்கு எது சிறந்தது என்பதற்கிணங்கத் தீர்மானிக்கலாம்.

கடந்த வருடங்களாக நோர்வேயிற் திருமணமாகாமலே பெண்ணும் ஆணும் சேர்ந்து வாழலாம் என்பது சாதாரணமானதும் ஏற்றுக்கொள்ளப்பட்டதுமாகும். அப்படியான பட்சத்தில் இருவரும் 16 வயதைப் பூர்த்திசெய்திருக்க வேண்டும். 16 வயதிற்குட்பட்ட எவருடனும் பாலுறவுத் தொடர்பு வைத்துக்கொள்ளல் நோர்வேயச் சட்டத்திற்கமையத் தடைசெய்யப்பட்டுள்ளது.

திருமணம் செய்யாத எவரும் சேர்ந்து குழந்தை பெற்றால், குழந்தைக்கான சட்டரீதியான பெற்றோர் உரிமையைத் தாயாரே பெறுவார். பொருளாதாரப் பொறுப்பைப் பகிர்வதற்குத் தகப்பனார் கடமைப்பட்டுள்ளார். அவர் தாயுடனும் குழந்தையுடனும் சேர்ந்து வசிக்காதுவிட்டால் மாதம் ஒன்றுக்கு ஒரு குறிப்பிட்ட பணத்தொகையைச் (குழந்தைக்குரிய பங்கு) செலுத்தவேண்டும். தகப்பனாரும் குழந்தையும் சேர்ந்து வசித்தால், தாயார் குழந்தைக்குரிய பங்கைச் செலுத்துதல் வேண்டும்.

திருமணம் செய்யாமல் சேர்ந்து வாழ்வோர் பொருளாதாரத்தையும் குழந்தைகளுக்கான பொறுப்பையும் பற்றி எழுத்துமூல உடன்படிக்கையொன்றை அமைக்கலாம். அப்படியான உடன்படிக்கைகள் பற்றி மக்கள் பதிவேட்டுக்காரியாலயத்திற்குத் தெரியப்படுத்தவேண்டும். உடன்படிக்கையானது அரசாங்க அலுவலகத்தில் பதிவுசெய்யப்பட்டிருக்காது விட்டால் அவ்விருவரையும் தனியானவர்களாக அதிகாரிகள் தவறாகக் கையாள ஏதுவாகும்.

உயில் எழுதப்பட்டிருக்காது விட்டால், திருமணமாகாத சோடி ஒருவரினது மரணத்தின் பின் மற்றவர் வாரிசாக முடியாது.

## குடும்பத்திட்டம்

தடை பாவிப்பதனால் ஒருவருக்கு எத்தனை குழந்தைகள் வேண்டுமெனச் சுயமாகத் தீர்மானிக்க முடிகின்றது.

பலர் தாம் படிப்பை முடித்த பின் குழந்தைக்கு நல்லதொரு ஆரம்ப வாழ்வைக் கொடுப்பதற்காகப் பொருளாதார ரீதியாகத் தாம் உறுதிபெறும் வரை குழந்தை பெறாமற் காத்திருக்க விரும்புகின்றார்கள்.

பிறக்கும் குழந்தைகள் யாவும் பெற்றோர்களால் விரும்பப்படுபவையாக இருக்கவேண்டுமென்பதால் நோர்வேய அதிகாரிகள் மக்களைத் தடை பாவிப்பதற்கு ஊக்கப்படுத்துகின்றனர்.



FOTO: ANNE LISE BAY BRAATHEN

எப்பொழுது மற்றும் எத்தனை குழந்தைகள் தமக்கு வேண்டும் என்று பல சோடிகள் திட்டமிடுகின்றன.



படிப்பகம்

www.padippakam.com

சகல விதமான தடைகளையும் மருந்துக்கடையில் வாங்கலாம். ஆனால் சில வகைகளுக்கு ஒருவர் மருத்துவருடைய மருந்துச்சீட்டை வைத்திருத்தல் வேண்டும். தடை வாங்குவதற்கு ஒருவித வயது எல்லையுமில்லை. எவரும் மருத்துவரிடமோ அன்றிச் சுகாதார நிலையத்திற்கோ சென்று தடையைப்பற்றிய தகவல் பெறமுடியும். தகவலைத் தரும்படி வேண்டிக்கொள்ளப்பட்ட சுகாதாரசேவையாளர்களுக்கு, அந்நபருடைய குடும்ப அங்கத்தவர்களுக்கோ அன்றி மற்றவர்களுக்கோ இதைப்பற்றி எதையேனும் கூறுவதற்கு அனுமதியில்லை. சுகாதாரசேவையாளர்களுக்குத் தொழில் இரகசியக் கட்டுப்பாடு உண்டு.

சில விதமான தடைகள் கர்ப்பமாவதிலிருந்து பாதுகாப்பதுடன் தொற்றுகின்ற பாலுறுப்பு நோய்களிலிருந்தும் பாதுகாக்கின்றன. சகல இளம் பராயத்தினரும் பாலியற் குடித்தனமொன்றை ஆரம்பிக்கு முன்பாக அப்படியான பாதுகாப்பைப் பற்றி அதிக தகவல் தெரிந்து வைத்திருப்பது விசேடமாக முக்கியம். சகல இளம் ஆட்களையும் எட்டுவதில் உறுதியாக இருப்பதற்காக, இளைஞர் பாடசாலைகளும் மேற்தரப் பாடசாலைகளும் தடை பற்றியும் பாலியற் தொடர்பின் பொருட்டு எல்லோருக்கும் உள்ள பொறுப்பையும் பற்றித் தகவல் தருகின்றன.

பலர் தடையைப் பாவித்தாலும், பெண்கள் திட்டமிடாமல் கர்ப்பமாவது நிச்சயமாக நடப்பதொன்று.

வெளியே விளையாடும் குழந்தைகள்.



FOTO: KNUDSENS FOTOSENTER



படிப்பகம்

www.padippakam.com

இது கடினமானதொரு நிலைமையாக அவர்களுக்கு அமைகின்றது. சிலர் கர்ப்பச் சிதைவையும் தெரிவுசெய்கின்றனர்.

கர்ப்பச் சிதைவிற்கான பெண்ணின் உரிமை பற்றிய தனிச் சட்டமொன்று நோர்வேயிலுள்ளது.

பலத்த அரசியல் முரண்பாட்டின் பின் இச் சட்டம் 1978 இல் அமுல்படுத்தப்பட்டது. நோர்வேச் சமுதாயத்தில் கர்ப்பச் சிதைவைப்பற்றித் தொடர்ந்தும் பலத்த விவாதமுண்டு.

கர்ப்பமான பெண்ணொருத்தி குழந்தையைப் பெற விரும்பாதுவிட்டால் கர்ப்ப காலத்தில் 12 கிழமைகள் செல்வதற்கு முன்னதாகக் கருச்சிதைவை மேற்கொள்வதாவெனத் தானே தீர்மானிக்கலாம் எனச் சட்டம் வலியுறுத்துகின்றது. 12 கிழமைகளுக்கு மேற்பட்டுவிட்டால் அவர் விசேடமாக விண்ணப்பிக்க வேண்டும். அவ் விண்ணப்பம் பெண்ணினது உடல்நலம் அல்லது சமூக நிலையின் காரணத்தால் கருச்சிதைவு அவசியம்தானாவெனக் கணிக்கும் மருத்துவர்களாற் கையாளப்படும்.

## நோர்வேயில் குழந்தைகள்

ஒரு நாட்டிலுள்ள சிந்தனை முறை, விதிமுறைகள் மற்றும் அறநெறி ஆகியன பற்றி ஒருவர் அறிவதற்குக் குழந்தை வளர்ப்பில் எப்படியான உயர் இலட்சியங்கள் உபயோகிக்கப்படுகின்றன என்பதை அவதானித்தல் பிரயோசனமுடையதாகும். நோர்வேயப் பெற்றோர்கள் மதம் மற்றும் அரசியல் பற்றி வேறுபாடான கருத்துக்கள் உடையவர்களாக இருக்கலாம். தமது குழந்தைகளையும் அவர்கள் வித்தியாசமாக வளர்க்கலாம். ஆனால் அநேகமானோர் சமுதாயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட, வழக்கமான விதிமுறைகளைப் பின்பற்றுகின்றனர்.

அநேகமாக எல்லா நோர்வேயக் குழந்தைகளும் அரசாங்க பாடசாலைகளுக்குச் செல்வதுடன் பாடசாலைகளும் அதிகாரிகளால் தீர்மானிக்கப்பட்ட விதிமுறைகளுக்கு அமையக் குழந்தைகளைப் பயிற்றக் கடமைப்பட்டுள்ளன. ஜனநாயக உயர் இலட்சியங்களையுடைய நோர்வேய அரசியல் மற்றும் கிறிஸ்தவ மதம் ஆகியவற்றின் செல்வாக்கிற்குப் பாடசாலையினது விதிமுறைகள் உட்பட்டிருக்கின்றன.

## சுயத்தன்மையும், சுதந்திரமும் பொறுப்பும்

அநேகமான நோர்வேயக் குழந்தைகள் சுயமாக இயங்கக்கூடியதாக ஆரம்பத்திலேயே பயிற்றப்படுவதுடன், வீட்டிலும் மற்றும் பாடசாலையிலும் எடுக்கும் தீர்மானங்களில் அவர்களும் சேரலாம். கேட்பவை, பார்ப்பவை எல்லாவற்றையும் மாத்திரம் நம்பாமல் சுயமாக யோசிக்கும்படியும் அவர்கள் அடிக்கடி வேண்டப்படுகின்றார்கள். சாதாரணமாகக் கீழ்ப்படிதல், ஒழுக்கம் ஆகியனவற்றிற்கு நோர்வேயக் குழந்தைவளர்ப்பில் அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுவதில்லை. ஆனால் குழந்தைகள் சுறுசுறுப்பாகவும், சுயமாக இயங்கக்கூடியவர்களாகவும், சிருஷ்டிக்கும் தன்மையுடையவர்களாகவும் இருக்கவேண்டுமென்பதில் அதிக அக்கறை எடுக்கப்படுகின்றது. குழந்தைகளை



படிப்பகம்

www.padippakam.com

அடிக்கவோ அன்றி வேறு வழிகளில் உடற் தண்டனை அளிக்கவோ பெற்றோர்கள், ஆசிரியர்கள் அல்லது வேறு எவருக்காயினும் அனுமதியில்லை.

இன்றைய குழந்தைகளுக்கு அளவுக்கு மீறிய சுதந்திரம் கிடைத்திருப்பதனாலேயே அவர்கள் தரம்குறைந்த நடத்தையுள்ளவர்களாக இருக்கின்றார்களெனப் பல முதியவர்கள் கருதுகின்றார்கள். குழந்தைகளுக்குக் கட்டுப்பாடு வேண்டுமென்பதில் ஆசிரியர்கள், பெற்றோர்கள் இருவரும் ஒரு மனதுடையவர்களாக இருக்கின்றார்கள். ஆனால், குழந்தைகள் பார்க்கப்பட வேண்டுமேயன்றிக் கேட்கப்படக் கூடாது என்ற சட்டத்தையுடைய பழங்காலத்தைய கண்டிப்பான குழந்தைவளர்ப்பிற்குத் திரும்பிச் செல்ல அநேகமானோர் விரும்புகின்றார்களில்லை. ஜனநாயக சமுதாயமொன்றில் சுயமாக இயங்குவதற்கான வளர்ப்பு அவசியமென்பதில் அநேகமானோர் ஒரு மனதாகவிருக்கின்றனர். சுதந்திரத்தையும் பொறுப்பையும் பெறுமற் சுயமாக இயங்கும் தன்மையைப் பயிலுவது கடினம்.

## குழந்தைகள் பற்றிய சட்டம்

குழந்தைகளுடைய உரிமைகள் பாதுகாக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதற்கு நோர்வேயச் சட்டத்தில் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கின்றது. தமது குழந்தைகளுக்கு அத்தியாவசியமான பராமரிப்பை அளிப்பதற்குப் பெற்றோர்கள் கடமைப்பட்டுள்ளார்கள். ஆனால் பெற்றோர்கள் சுதந்திரமாக அதிகாரம் செய்யக்கூடியதாகக் குழந்தைகள் அவர்களுடைய உடமைகளல்ல.

முன்னைய காலத்தில் பெரியகுடும்பமொன்றிடமிருந்த கடமைகளிற் பலவற்றை நோர்வேயில் அரசாங்கம் பொறுப்பேற்றுள்ளது. குழந்தைகள் தமது குடும்பங்களால் கீழ்த்தரமாக நடத்தப்பட்டால் அவர்களுக்கு உதவி கிடைப்பதைக் கவனித்துக் கொள்வதற்கு அரசாங்கம் கடமைப்பட்டுள்ளது.

ஒவ்வொரு நகராட்சியிலும் குழந்தைகளினதும் இளையோரினதும் வாழ்க்கை நிலைமைகளை உன்னிப்பாக அவதானித்துக் கொள்வதற்கெனத் தெரிவு செய்யப்பட்ட ஆட்களையுடைய குழுவொன்றுள்ளது. குழந்தைகளுடைய உரிமைகள் மதிக்கப்படுகின்றனவா என இது மேற்பார்வையிடும். இக்குழுவைக் "குழந்தைகள் பொதுநலப்பாதுகாப்பு" என்று அழைக்கப்படும். குழந்தைகள் உடலாலோ அன்றி உள்ளத்தாலோ கொடுமைப்படுத்தப்படுவதாகவோ, அல்லது தமது குழந்தைகளைப் பராமரிக்க முடியாத பெற்றோர்கள் உள்ளார்கள் என்பதையோ குழந்தைகள் பொதுநலப்பாதுகாப்பு அறிந்தால் அவ்விடயத்தை ஆராய்வதுடன் அக்குடும்பத்திற்கு உதவி பெற்றுக்கொடுப்பதற்கு முயல்வதற்கும் அவர்கள் கடமைப்பட்டுள்ளார்கள்.

தாரத்தையோ அல்லது வேறு வயதுவந்தவர்களையோ அடிப்பது போன்றே தமது சொந்த அல்லது மற்றவர்களுடைய குழந்தைகளை அடிப்பதும் நோர்வேயச் சட்டத்தின்படி தண்டனைக்குரியதாகும். பெற்றோர்கள் தமது குழந்தைகளை அடித்தால் அல்லது வேறு விதங்களில் கொடுமைப்படுத்தினால், அக்குழந்தைகள் ஒரு சிறு காலவரைக்கு வேறொரு வீட்டிற்கு மாற்றப்பட்டுக் கொடுமையிலிருந்து பாதுகாக்கப்படுவதற்குக் குழந்தைகள் பொதுநலப்பாதுகாப்புக்குழு தீர்மானம் செய்யலாம். மிகவும் பாரதூரமான



படிப்பகம்

www.padippakam.com

நிலைமைகளில் பெற்றோர்கள் குழந்தைகளுக்கான பெற்றோர் உரிமையை இழக்கக்கூடும். நோர்வேயில் குழந்தைகளுடைய உரிமைகள் முழுத் தேசத்திலும் மதிக்கப்படுகின்றனவா எனக் கண்காணிக்கும் கடமையுடைய அரசாங்க பதவியில் நபரொருவர் (குழந்தைநலக் கண்காணிப்பு உயரதிகாரி) உள்ளார். குழந்தைகள் தாமாகவே கடித மூலமாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ இந் நபருடன் தொடர்பு கொள்ளலாம்.

## வயது எல்லைகள்

நோர்வேயில் அதிகார வயது 18 ஆகும். இளம் பருவத்தினர் அப்பொழுது அரசியற் தெரிவிற்கான வாக்குரிமையும், மோட்டார் வாகனத்திற்கான சாரதிப் பத்திரம் பெறுவதற்கான உரிமையும் மற்றும் தம்முடைய வாழ்க்கையைப் பற்றித் தீர்மானம் செய்வதற்கான சகல உரிமைகளையும் பெறுவார்கள்.

இளம் பருவத்தினர் 15 வயதாக இருக்கும் பொழுதே அவர்கள் தாமாக மதம், கல்வி மற்றும் தாபனங்களிலான அங்கத்தவம் பற்றித் தீர்மானம் செய்வதற்கு உரிமையுடையவர்கள்.

குற்றத்திற்கான குறைந்த வயதும் அத்துடன் பதினைந்தாகும். அதாவது 15 வயதுடைய இளம் பருவத்தினர், தாம் செய்யும் சட்டமீறல்களுக்கு அவர்களே பொறுப்பாளர்களாவதுடன் அவர்கள் கைது செய்யப்பட்டுத் தண்டிக்கப்படவும் கூடும்.

பாலியலுக்கான குறைந்த வயது நோர்வேயில் 16 ஆகும். அதன் பொருள் 16

சாதாரண நோர்வேயக் குடும்பமொன்றினது இல்லத்தில்.




FOTO: RUNE LISLERUD/SAMFOTO



படிப்பகம்

www.padippakam.com

வயதிற்குட்பட்ட ஒருவருடன் கொள்ளும் பாலியற் தொடர்பு குற்றச் செய்கையொன்றாகக் கணிக்கப்பட்டுத் தண்டனைக்கு வழி வகுக்கலாம்.

## வீட்டில் வசிக்கும் இளம் பருவத்தினர்

ஆரம்ப பாடசாலைக்குச் செல்லும் சமயம் வீட்டிலே வசிப்பதற்கு அநேகமான இளம் வயதினரால் இன்று முடிகின்றது. வீட்டிற்கு அருகாமையில் மேற்தரப் பாடசாலையிருந்தால், அநேகமானோர் இப்பாடசாலையை முடிக்கும் வரைக்கும் கூட வீட்டில் வசிப்பதையே தெரிவு செய்கின்றனர். சொந்தமான அறைத்தொடரையோ அன்றித் தனியறையையோ தமக்கென ஒழுங்கு செய்வது அதிக செலவாகுமென்ற காரணத்தால் வயதுவந்த இளம் பருவத்தினரில் பலர் தனியாக வசிப்பதற்குக் கூடுதலாக விரும்பினாலும், தற்பொழுது அநேகமாகப் பல வருடங்கள் வீட்டிலேயே வசிக்கின்றனர்.

சிறுமிகளும் சிறுவர்களும் அதிகாரவயதை அடைவதற்கு முன்பாகவும் கூடப் பெற்றோர்களிடமிருந்து விலகித் தனியாகவோ அன்றி நண்பர்களுடனோ தனியறையில் வசிப்பது ஏற்றுக்கொள்ளப்பட்டதொன்றாகும். தனியாக வசிக்கும் இளம் வயதினர் சாதாரணமாகத் தமது குடும்பத்துடன் தொடர்ந்தும் அதிக தொடர்பையும் ஒரு நெருக்கமான பிணைப்பையும் வைத்துக்கொள்ள விரும்புவார்கள்.

ஒவ்வொரு குழந்தையும் தத்தமது படுக்கையறையை வைத்திருப்பது சாதாரணம்.




FOTO: ANNE LISE BAY BRAATHEN



படிப்பகம்

www.padippakam.com




சிறுமிகள், சிறுவர்கள் இருவரும் கால்பந்து விளையாடுகின்றார்கள்.




அநேகமான நோர்வேயக் குடும்பங்களில் குழந்தைகள் ஏற்கனவே சிறுவர் பாடசாலைக்குச் செல்லும் பொழுதே தமக்கெனப் படுக்கையறைகளைப் பெறுவது சாதாரணம். அவ்வறை குழந்தையினது அல்லது இளம்பிள்ளையினது பிரத்தியேகப் பகுதியாவதுடன் அங்கு அவர்கள் பெரும்பாலும் தாமாகவே தளபாட அமைப்பு மற்றும் அலங்கரிப்பைத் தீர்மானிக்கலாம். அவர்கள் அங்கு நண்பர்களுடைய வருகையைப் பெறுவதும் அத்துடன் சாதாரணமாகும். ஆனால் அநேகமான பெற்றோர்கள் தமது சொந்தக் குழந்தைகள் மற்றும் குழந்தைகளுடைய நண்பர்களைப் பொறுத்த வரை ஒழுங்கு மற்றும் ஒழுக்கம் ஆகியனவற்றிற்குக் குறிப்பிட்ட விதிமுறைகளை வைத்திருக்கின்றார்கள்.

அநேகமான குடும்பங்களில் சிறுமிகள், சிறுவர்கள் இருபாலாரும் அவர்கள் வீட்டில் வசிக்கும் வரைக்கும் வீட்டுவேலையில் தமது பங்கிற்குப் பொறுப்பாவார்கள். பலர் வீட்டில் செய்யும் வேலைக்குச் சம்பளமாகக் கிழமைப்பணத்தைப் பெறுவார்கள். இப் பணத்தைச் சாதாரணமாக அவர்களே என்ன செய்வதெனத் தீர்மானிக்கலாம்.

குழந்தைகளுக்காக ஒழுங்கு செய்யப்பட்ட ஓய்வுநேர ஈடுபாடுகளுக்கு ஆதரவு அளிப்பதற்கு நோர்வேயப் பெற்றோர்கள் அதிக நேரத்தையும் பணத்தையும் செலவு செய்வது சாதாரணமாகும். குழந்தைகளுக்கு ஓய்வுநேரச் சலுகைகள் வழங்குவதற்கு விளையாட்டமைப்பு, சங்கீதக் குழு, சாரண இயக்கம் ஆகியனவற்றிற்குப் பணம் தேவைப்படுகின்றது. அப்படித் தேவைப்படும் பணத்தைத் திரட்டுவதற்காகப் பெற்றோர்கள் ஒத்துழைப்பது வழமையே.



படிப்பகம்

www.padippakam.com

மிகவும் வேறுபட்ட சூழ்நிலைகளையும் திறமைகளையும் உடைய மாணவர்கள் ஒருவரையொருவர் ஏற்றுக் கொள்வதற்கும் ஒருவருடனொருவர் ஒத்துழைப்பதற்கும் கற்கும் பொழுது ஆசிரியர்களுக்கு அது அநேகமாகக் கடினமானதொரு கடமையாகின்றது. பல நோர்வேய இளம் பிள்ளைகள் ஆசிரியர்களுக்கும் மற்றைய வயது வந்தோர்களுக்கும் குறைவான மரியாதையே காட்டுகின்றார்கள். சில மாணவர்கள் கலாட்டா செய்வதும் படிப்பித்தலைக் குழப்புவதும் பாடசாலையில் அசாதாரணமல்ல. நிலைமை மிகவும் பாரதூரமாகும் பட்சத்தில், பாடசாலை பெற்றோர்களுடன் தொடர்பு கொள்ளும். மாணவர்களைத் திருத்துவதற்குச் சில வேளைகளில் இளம் பருவத்தினரைப் பற்றி விசேடமான அறிவுடைய ஆலோசகர்களையும் வேறு துறைவல்லுனர்களையும் பிரயோசனப்படுத்தப்படும்.

அநேகமான மாணவர்கள் நோர்வேய ஆரம்ப பாடசாலையில் பாதுகாப்பாக இருப்பதாக உணர்வதுடன் நன்றாகவும் இருக்கின்றார்கள். சாதாரணமாக ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையில் நெருங்கியதும் சம்பிரதாயம் அற்றதுமானதொரு உறவு உண்டு. பல இடங்களில் மாணவர்கள் ஆசிரியர்களுடைய முதற்பெயரைப் பாவிப்பதுடன் பாடசாலைக்கு வெளியிலும் கூட ஆசிரியருடன் தோழரொருவரைப் போன்று கதைப்பதும் வழமையே.

நோர்வேயப் பாடசாலைகளிலுள்ள இச் சுதந்திரமான சகவாசப்பிரியச் சிறப்பியல்பு சில தருணங்களில் அமைதியின்மைக்கு வழிகோலினாலும், கண்டிப்பான ஒழுங்குகளைக் கொண்ட பழங்காலத்தைய பாடசாலையை விரும்புவது வெகு சிலரே.

## பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையிலான உறவு

குடும்பமொன்றிலுள்ள பெண்ணும் ஆணும் வீட்டிற்கு வெளியே தொழில் செய்யவேண்டியது நோர்வேயில் சாதாரணமும், அநேகமாக மிகவும் அவசியமுமாகின்றது. பெற்றோர்கள் வேலைக்குச் செல்லும் சமயம் சில குழந்தைகளுக்குச் சிறுவரில்லத்தில் இடம் கிடைக்கின்றது. ஆனால் வெகு சில சிறுவரில்லங்களே உள்ளதுடன் இடங்களுக்கான போட்டியும் பெரிதாகும். குழந்தைகளைக் கவனித்துக் கொள்ளக்கூடிய எவரையேனும் தேடுவதில் பல பெற்றோர்களுக்கு அதனால் பிரச்சனைகளுண்டு. அநேகமானோர் குழந்தைகளைப் பிரத்தியேகமான குழந்தை பராமரிப்பாளரொருவரிடம் கொண்டு செல்வர். அல்லது வீட்டிலொரு குழந்தை பராமரிப்பாளரை (dagmamma) வைத்திருப்பர். குழந்தைகளைக் கவனித்துக் கொள்வதற்கு அதிக பணம் செலவாவதுடன் மிகுந்த திட்டமிடுகையும் வேண்டப்படுகின்றது. சிறுகுழந்தைகளையும் வேலையையுமுடைய பெற்றோர்கள் களைப்பு மிக்கதொரு வாழ்க்கையை வாழ்வதுடன், அவர்களிடம் அநேகமாக வளமற்ற பொருளாதாரமும் உண்டு.

நோர்வேயக் குடும்பங்களில் பாட்டர்களை அல்லது வேறு குடும்ப அங்கத்தவர்களை உதவிக்கு வீட்டில் வைத்திருப்பவர்கள் வெகு சிலரே. பணம் கொடுத்து வீட்டுதவியைப் பெறுவதற்கு வசதி படைத்தவர்களும் மிகச் சிலரே. வீட்டுவேலை அதனால் வேலைநேரத்தின் பின்னர் அல்லது விடுமுறை நாட்களில் செய்யப்பட வேண்டியுள்ளது. தம்பதிகளிருவரும் வீட்டிற்கு வெளியே வேலை



படிப்பகம்

www.padippakam.com




வீட்டில் வேலைகளைப் பகிரும் ஆணும் பெண்ணும்.

செய்யவதற்கும் இயலவேண்டுமானுல், வேலைநேரத்தின் பின்னர் குழந்தையைக் கவனிப்பது, வீட்டுவேலை போன்றவற்றிற்கான பொறுப்பையும் அவர்கள் பகிர்தல் அவசியமாகும்.

பெண்களுடைய வேலை, ஆண்களுடைய வேலை எனப் பாகுபாடு காட்டுவது இப்பொழுது சாதாரணமில்லை. இன்றைய இளம் ஆண்களில் அநேகமானேர் வீட்டிலுள்ள வேலைகளில் தம்முடைய பங்கைச் செய்வது இயற்கையாக எண்ணுகின்றுர்கள். முற்காலத்தில் பயிற்றப்பட்ட ஆண்களில் முதியோர்கள் வீட்டு வேலைகளில் சாதாரணமாகப் பங்கேற்பதில்லை.

பாடசாலையும் அநேகமான நோர்வேயப் பெற்றேர்களும் சிறுமிகளையும் சிறுவர்களையும் தற்பொழுது மிகவும் சமமாக வளர்ப்பதுடன் அவர்களுக்கு ஒரேவிதமான உரிமைகளையும் கடமைகளையும் அளிக்கின்றுர்கள். அப்படிச் செய்தாலும் சிறுமிகளும் சிறுவர்களும் எந்நேரமும் ஒரே விதமாக நடக்கவேண்டும் என்பது அதன் அர்த்தமல்ல.

சிறுமிகளும் சிறுவர்களும், பாடசாலையிலும் விளையாட்டுகளிலும் தோழர்களாக சேர்ந்திருக்கப் பழக்கப்பட்டுள்ளார்கள். பால்களுக்கு இடையில் சம அந்தஸ்து ஏற்படுவதற்காக ஊக்கமாகப் பாடுபடும் விசேடமான பொறுப்பொன்றைப் பாடசாலைக்கு அரசாங்கம் அளித்துள்ளது. நோர்வேயில் பெண்களும் ஆண்களும், திருமணமானவர்களும் திருமணமாகாதவர்களும்,உத்தியோகத் தோழர்களாகவும் நண்பர்களாகவும் வேலைத்தலங்களிலும் ஓய்வு நேரங்களிலும் ஒருமித்து இருப்பது சாதாரணம்.



படிப்பகம்

www.padippakam.com

தொடர்பைத் தவிர வேறு சமயத்தில் அறிமுகமில்லாத ஒருவரில் நீண்ட நேரத்திற்குப் பார்வையைப் பதியவிடுதல் மரியாதையீனமாக விளங்கிக் கொள்ளப்படும்.

உயர்ந்த குரல் சம்பாஷணை அல்லது சத்தமிட்டு நடந்துகொள்ளல் ஆகியவற்றை அநேகமான வயது வந்தோர்கள் விரும்புவதில்லை. சம்பாஷணையொன்றின் அல்லது விவாதத்தின் சமயம் வேறொருவர் கதைக்கும் பொழுது குறுக்கிடுவது மரியாதையீனமாக விளங்கிக் கொள்ளப்படும்.

வயது வந்தோர்கள் உணர்ச்சிகளை வெளிப்படையாகக் காட்டுவது சாதாரணமல்ல. காரணம், இது சாதாரணமாகச் சுயக்கட்டுப்பாட்டுக் குறைவாகக் கணிக்கப்படுவதாலேயாகும். மிரட்டல்கள் அல்லது வெளிப்படையாகக் கூறப்படும் அவமானங்கள் கடுமையானவையாகக் கருதப்பட்டுப் பெரும் முரண்பாடுகளுக்கு வழிவகுக்கலாம்.

நடைமுறையில் இது நிச்சயமாக எப்பொழுதும் நடக்காது விட்டாலும், மரியாதைக்கும் நன்நடத்தைக்குமான அதிகாரபூர்வமான நோர்வேய விதிமுறைகள் எல்லா மனிதர்களும் சமனாக நடத்தப்படவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றன.

நோர்வேயில் மரியாதையென்பது நட்பையும் மரியாதையையும் காட்டுவதேயன்றி இழிவுபடுத்தலும் கீழ்ப்படிதலுமல்ல. தம்முடைய சொந்த அதிகாரத்தை அல்லது அந்தஸ்தைக் காட்டும் பொருட்டு மற்றவர்களை மரியாதையின்றி நடத்துபவர்களை அநேகமானோர் விரும்புவதில்லை. தன்னைத் தானே உயர்த்திக் காட்டுதலை நோர்வேயில் ஏற்றுக்கொள்ளல் குறைவு. வெளிப்படையாகத் தனது அறிவு, செல்வம் அல்லது சமூக அந்தஸ்தைப் பற்றிப் புகழ்பவர் அநேகமாகப் பரிகாசத்திற்குரியவராக நோக்கப்படுவார்.


விளையாட்டு மகிழ்ச்சி

நோர்வேயில் சமூக அந்தஸ்திற்கான அறிகுறியாக உடைகள் சாதாரணமாகப் பாவிக்கப்படுவதில்லை. முக்கியமானதொரு பதவியையும் வருமானத்தையுமுடைய ஒருவர் பாடசாலை மாணவரொருவரைப் போன்றோ அல்லது தொழிலற்ற ஒருவரைப் போன்றோ உடையணியலாம். நோர்வேயர்களுக்கு அநேகமாக மொழி, நடத்தை, அறிவின் தரம் ஆகியனவே ஒருவருடைய அந்தஸ்திற்கான அறிகுறியைத் தருகின்றன. சில சுற்றாடல்களிற் காணப்படுவது போன்று, அதிக பணத்தை வைத்திருப்பதும் விலையுயர்ந்த உடைகளில் தம்மைக் காட்டிக் கொள்வதும் நோர்வேயச் சமுதாயத்தில் தானாகவே மரியாதையைத் தரமாட்டாது. உயர்ந்த வருமானத்தையுடைய பிரபல்யமானவர்களால்தாம் சாதாரணமாக வாழ முடியும் என்பதையும், வழக்கமான செயல்களைச் செய்ய முடியும் என்பதையும் மற்றவர்களிலிருந்து அதிக பேதமில்லாமல் இருக்க முடியும் என்பதையும் காட்ட முடிந்தால் அவர்களுக்குத் தாம் மற்றவர்களால் மிக நன்றாக விரும்பப்படுவோம் என்பது தெரியும்.

ஏற்றுக்கொள்ளப்பட்ட நடத்தை எது என்பது பற்றி இளம் பருவத்தினரும் முதியோர்களும் வேறுபட்ட கருத்துக்களை வைத்திருக்கலாம். சமுதாயத்தின் வெவ்வேறு சூழ்நிலைகளில் விதிமுறைகளும் வேறுபட்டவையாக இருக்கின்றன. அந்நியக் கலாச்சாரமொன்றில் எது சரியென்பதை அறிந்து கொள்ளக் காலமெடுக்கும். ஆனால் மரியாதை அளித்தல், மதித்து நடத்தல்,



படிப்பகம்

www.padippakam.com

மனிதத்தன்மையாக இருத்தல், உதவியாயிருத்தல் மற்றும் அமைதியாயிருத்தல் ஆகியன எப்பொழுதும் நோர்வேயிலும் கூட அனுதாபத்துடன் நோக்கப்படும்.
மற்ற நாடுகளிற் போன்றே நன்நடத்தைக்கான விதிமுறைகள் யாவற்றையும் மீறும், மதித்து நடக்காத, ஆவேசமுறுகின்ற, மரியாதையில்லாத, சுயநலமுடைய மனிதர்களை ஒருவர் சந்திக்க நேரிடலாம்.

மேலும் போதைப் பொருட்களைத் துர்ப்பிரயோகிக்கும் பலர் நோர்வேயில் உள்ளனர். அவர்கள் போதை மயக்கத்தில் இருக்கும் சமயம் கோபமூட்டக்கூடிய விதத்தில் நடக்கின்றனர். அன்றுடம் மது அருந்துபவர்கள் வெகு சிலராஞலும் நோர்வேயிற் சாதாரணமான போதைப் பொருள் மதுபானமேயாகும். இதற்கு மாருக ஓய்வு நேரம் மற்றும் கேளிக்கைகளின் தொடர்பாகப் பலர் மதுவைப் பாவிக்கின்றனர். அப்பொழுது அது ஒரே நேரத்தில் அதிகமாக அருந்தப்பட முடிந்து அதனுல் சிலர் தடைகளைத் தாண்டி மற்றவர்களைப் புண்படுத்துகின்றனர். தற்பாதுகாப்பிற்குத் தவிரப் பலாத்காரம் பிரயோகித்தலை நோர்வேயச் சட்டங்கள் அனுமதிப்பதில்லை. உதாரணத்திற்கு வெறிகாரரொருவரால் ஆத்திரமடைந்து, அவமானப்படுத்தப்பட்டாலும் சுயக்கட்டுப்பாட்டை ஒருவர் இழந்து அடிக்காதிருப்பது ஆகவே முக்கியம். பலாத்காரப் பிரயோகம் உடனடியாகக் காவற் துறையினருக்கு முறையிடப்படுவதுடன் அவர்களுடைய பதிவேட்டிலும் பதியப்படுவதற்கு வழியேற்படுத்தும்.

நோர்வேயச் சட்டங்களின்படி எவரையாவது பால், தோல்நிறம் அல்லது மதம் காரணமாகப் பாகுபாடு காட்டுவது தடை செய்யப்பட்டுள்ளது.

மற்றைய பிரயாணிகளைப் போன்றே கடவுச் சீட்டை விலைக்கு வாங்கும் மன்னர் ஊளாவினது பலருக்கும் அறிமுகமானதொரு படம்.




FOTO: JAN A. MARTINSEN/AFTENPOSTEN



படிப்பகம்

www.padippakam.com



FOTO: NORSK FOLKEMUSEUM

நாட்டுப் புறத்திலுள்ளதோர் சாதாரண தேவாலயம்.

பரம்பரை வழக்கங்களும் முக்கியமாகும். சடங்குகளையும் பரம்பரை வழக்கங்களையும் தேவாலயம் பாதுகாப்பதுடன், வாழ்க்கையில் முக்கியமான நிலைமைகளில் விசேட தினங்களைக் கொண்டாடுவதற்கும் பலர் தேவாலயத்திற்குச் செல்கின்றனர். இது உதாரணத்திற்குக் குழந்தையொன்றிற்கு ஞானஸ்நானம் செய்யும் பொழுதும், குழந்தைப் பிராயத்திலிருந்து அறிவு விருத்தியடைந்த மாற்றத்தை உறுதிப்பாட்டினுல் குறிப்பிடும் பொழுதும், எவராவது திருமணம் செய்யும் பொழுதும் அல்லது இறந்த ஒருவரது அடக்கத்தின் பொழுதும் நடைபெறும்.

குழந்தையொன்றிற்கு ஞானஸ்நானம் செய்யும் அதே வேளையில் அது அரசாங்க தேவாலயத்தின் அங்கத்தவராகவும் பதியப்படும். இந்த நினைவு தினத்தின் தொடர்பாக உறவினர்களையும் நண்பர்களையும் ஞானஸ்நான வைபவத்திற்குப் பின்னுல் வீட்டுக் கொண்டாட்டமொன்றிற்காக ஒன்று சேர்ப்பது சாதாரணம். பல குழந்தைகள் குடும்பத்தில் பல தலைமுறைகளாகப் பாவிக்கப்பட்ட ஞானஸ்நான உடையில் ஞானஸ்நானம் செய்விக்கப்படுவதுடன் குழந்தை ஞானஸ்நான தினத்தை நினைவில் கொள்வதற்காகப் பெயர் மற்றும் திகதியைக் கொண்ட தங்கம் மற்றும் வெள்ளியிலான அன்பளிப்புகளைப் பெறும்.

ஞானஸ்நானம் செய்யப்பட்டவர்கள் 14 – 15 வயதாக இருக்கும் பொழுது தேவாலயத்தில் உறுதிப்பாடு செய்விக்கப்படுவதைத் தெரிவு செய்யலாம். இளையோர்கள் அச்சமயம் குருவானவரால் ஆசீர்வதிக்கப்பட்டு அரசாங்க



படிப்பகம்

www.padippakam.com

தேவாலயத்தில் அங்கத்தவர்களாகத் தொடர்ந்தும் இருப்பதற்குச் சம்மதிக்கின்றார்கள்.

உறுதிப்பாட்டிற்குப் பின்னர் குடும்பக் கொண்டாட்டமொன்றை வைப்பது சாதாரணம். உறுதிப்பாடு அளிக்கப்பட்டவருக்கு விருந்தினர்கள் அன்பளிப்புகளை வழங்குவர்.

எவராயினும் திருமணம்செய்ய வேண்டினால் சம்பிரதாயமற்ற (borgerlig) அல்லது கோவிற் திருமணத்தை அவர்கள் தெரிவு செய்யலாம். இப்பொழுதும் பலர் பூசைப் பீடத்திற்கு முன்பாகக் குருவானவரால் நடத்தி வைக்கப்படும் புனிதமான தேவாலயத் திருமணமொன்றைத் தெரிவுசெய்கின்றார்கள். எவராயினும் இறக்கும் பொழுது ஏறத்தாழ ஒரு கிழமைக்குப் பின்னால் சவஅடக்கத்தை வைப்பது சாதாரணம். அச் சமயம் உறவினர்களும் நண்பர்களும் தேவாலயத்தில் நினைவாஞ்சலியொன்றிற்காக ஒன்றுகூடுவர். இறந்தவரையுடைய பெட்டியை அடக்கம் செய்வதற்கு அல்லது எரிப்பதற்கு முன்பாக நினைவுகூர்தல் பிரசங்கம், பாட்டு, சங்கீதம் ஆகியன இருக்கும்.

அப்படியான வைபவங்கள் முக்கியமானவையெனப் பல நோர்வேயர்கள் உணர்ந்தாலும், வணங்குவதற்காகவும் கடவுள் பூசையில் பங்கேற்பதற்காகவும் தேவாலயத்திற்கு ஒழுங்காகச் செல்பவர்கள் அதிகமானோரல்ல. சமயம் தனிப்பட்டதொரு விடயமெனப் பலர் கருதுவதுடன் எவராவது தீவிரமாகச் சமய உணர்வுகளைப் பிரசித்தமாகக் காட்டினால் சிறிது கூச்சமும் அடைகின்றார்கள். அதிகமான நோர்வேயர்களிடம் மதப்பற்று குறைவாகவே காணப்படுகின்றது. சுயமாக இயங்கவும் தமது எதிர்காலத்தைத் திட்டமிடவும் கூடியதாக அதிகமானோர் வளர்க்கப்பட்டதன் விளைவாகவும் இது ஒருவேளை இருக்கலாம்.

விதியையோ அல்லது கடவுள் செயலையோ அவர்கள் உடனே நம்புவதில்லை. அநேகமானோருக்கு எல்லாவற்றையும் கடவுளிடமே ஒப்படைக்காமல் தமது சொந்த வாழ்க்கை நிலைமையை எப்படித் தாம் அந்த வேளைக்கேற்றவாறு மாற்றலாம் என நினைப்பதே எல்லாவற்றிற்கும் மேலாக முக்கியம். பலர் அத்துடன் தேவாலயப் போதனையில் இணங்காதிருப்பதுடன் நவீன சமுதாயமொன்றினில் தேவாலயத்தின் விதிமுறைகளும் பணிக்கைகளும் பொருந்துபவையல்ல என்றும் கருதுகின்றார்கள். 80.ம் ஆண்டுகளில் வருடமொன்றிற்குச் சுமாராக 6000 நோர்வேயர்கள் அரசாங்க தேவாலயத்திலிருந்து விலகியுள்ளார்கள்.



FOTO: NORSK FOLKEMUSEUM

பழையதோர் ஆதிமூலச் சாற்றுப்படி.

## சமயப் பெருநாட்கள்

நத்தார், மார்கழி 24 இல் ஆரம்பிக்கும் கிறிஸ்தவப் பெருநாளொன்றாகும். யேசு பிறந்ததின் நினைவாக அது கொண்டாடப்படும்.

நத்தார் மாலை (மார்கழி மாதம் 24 ந் திகதி மாலை 5 மணிக்குப் பின்னால்) விசேடமாகக் குழந்தைகளினதும் குடும்பத்தினதும் கொண்டாட்டமாகும். குடும்பமும் உறவினர்களும் ஒன்றுகூடி, ஒருமித்து உணவருந்தி ஒருவருக்கொருவர் அன்பளிப்புகளை வழங்குவர். தேவாலயங்களில் குடும்பக் கடவுள்பூசை நடைபெறும். அத்துடன் வேறு நேரங்களில் அடிக்கடி



படிப்பகம்

www.padippakam.com

தேவாலயத்திற்குச் செல்லாத பலர், நத்தார் மாலையன்று கடவுள் பூசையில் பங்குபற்றுவர்.

நத்தார் பெருநாள் மார்கழி 24 ந் திகதியிலிருந்து 26 ந் திகதி வரை நீடிக்கும். அச் சமயம் சகல கடைகளும் அநேகமான தேநீர் சாலைகளும் மூடப்பட்டிருக்கும். இயலக்கூடியவர்கள் எல்லோரும் குடும்பத்துடன் ஒருமித்து இருப்பதற்காக லீவு எடுப்பார்கள். குடும்பமில்லாதவர்களுக்கு நத்தார் தனிமையானதொரு நேரமாக இருக்கக் கூடும். பல இடங்களில் மனிதாபிமானச் சங்கங்களும் தனிப்பட்டவர்களும் நத்தார் நாட்களில் ஒருவருடனும் சேர்ந்திருக்க முடியாதவர்களுக்கு ஒன்றுகூடும் வைபவங்களை ஒழுங்கு செய்வர்.

ஈஸ்ரர் திருநாள் பங்குனி – சித்திரை மாதங்களில் 5 நாட்கள் வரை நீடிக்கும். ஈஸ்ரருக்கான காலநேரம் வருடத்திற்கு வருடம் மாறுபடும். யேசுவின் இறப்பையும் உயிர்த்தெழுதலையும் நினைவு கூர்வதற்கே ஈஸ்ரர் கொண்டாடப்படுகின்றது. வேதாகமம் (பைபிள்) – கிறிஸ்தவர்களுடைய புனித நூல் – யேசு ஒரு ஆபத்தான புரட்சிக்காரராகத் தோன்றியதாகவும், அவர் கைது செய்யப்பட்ட பின்னர் சிலுவையொன்றில் தூக்கப்பட்டு இறந்ததாகவும் கூறுகின்றது. அவர் அடக்கம் செய்யப்பட்டார். ஆனால் அவர் மறுபடியும் உயிர்த்தெழுந்ததாக பைபிள் கூறுகின்றது. ஈஸ்ரர்தான் உண்மையிலேயே கிறிஸ்தவப் பெருநாட்களில் மிகப் பெரியதாகும். ஆனால் அநேகமான நவீன மனிதர்களுக்கு இன்று ஈஸ்ரர் கூடுதலாக நல்லதொரு இலைதளிர்கால விடுமுறையாகத் தோன்றமளிக்கின்றது. கடைகளும் தேநீர் சாலைகளும் சாதாரணமாக எல்லா ஈஸ்ரர் நாட்களிலும் மூடப்பட்டிருக்கும். பல நோர்வேயர்கள் பனிச் சறுக்கலுக்குச் செல்வதற்கும் இலைதளிர்காலச் சூரியனில் தவிட்டுநிறமாவதற்கும் வேண்டி மலைக்குச் செல்வார்கள். இலைதளிர்காலத்தைச் சந்திப்பதற்காகச் சிலர் கடலுக்குச் செல்வர். நீண்டதொரு பனிக்காலத்தின் பின்னர் உடலில் வெயில் பிடிப்பதற்காகத் தெற்கு ஐரோப்பாவிற்குச் செல்வதும் கடந்த வருடங்களாகச் சாதாரணமாகிவிட்டது.

ஈஸ்ரருக்குப் பின்னல் சுமாராக 7 கிழமைகளில் வரும் 2 புனிதநாட்களே (pinse) வெள்ளை ஞாயிறு விடுமுறையாகும். கிறிஸ்தவ மதத்தின் ஆரம்பத்தை நினைவு கூர்வதற்கே வெள்ளை ஞாயிறு தினம் கொண்டாடப்படும். யேசு சொர்க்கத்திற்கு எடுக்கப்பட்டதாகவும் ஆனல் அதற்கு முன்பாக அவர் தனது நண்பர்களைச் சந்தித்துக் கிறிஸ்துவினது அழைப்பை அவர்கள் மூலம் எல்லோருக்கும் பரப்புவதற்காக அவர்களுக்குப் புனித ஆத்மாவை அளித்ததாகவும் பைபிள் கூறுகின்றது. அநேகமான நோர்வேயர்கள் வெள்ளை ஞாயிறை இன்று வசந்தகால ஆரம்பத்திலுள்ள சில நல்ல விடுமுறை நாட்களுடன் இணைக்கின்றார்கள்.





நத்தார் மாலையன்று நத்தார் தாத்தா குழந்தைகளுக்குப் பரிசுகள் கொண்டு வருகின்ருர்.



படிப்பகம்

www.padippakam.com




## நோர்வேப் படம்

நோர்வேயில் 4,2 கோடிக்கும் சிறிது மேற்பட்ட குடிமக்கள் உள்ளனர். அவர்களில் 147 800 பேர் வெளிநாட்டுப் பிரஜைகளாவர்.

நோர்வேயிலுள்ள மாகாணங்களில் வெளிநாட்டுப் பிரஜைகளின் பிரிவு:

1. Finnmark: 1863
2. Troms: 2694
3. Nordland: 3128
4. Nord-Trøndelag:1802
5. Sør-Trøndelag: 5544
6. Møre og Romsdal:3452
7. Sogn og Fjordane:1710
8. Hordaland:11021
9. Rogaland: 13777
10. Vest-Agder: 5580
11. Aust-Agder: 2537
12. Telemark: 3653
13. Vestfold: 4767
14. Oslo: 47261
15. Buskerud: 8128
16. Oppland: 3484
17. Hedmark: 3786
18. Akershus: 16999
19. Østfold: 6588

(தகவல்:
Statistisk Sentralbyrå 1.1.92)



படிப்பகம்

www.padippakam.com

"நோர்வேயில்" எனும் இந்நூலின் மேலதிக பிரதிகளைக்
கீழே காணும் விலாசத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்:

Utlendingsdirektoratet
Tolke- og informasjonsavdelingen
Postboks 8108 Dep.,
0032 Oslo
Tlf. (02) 53 08 90

UDI

படிப்பகம்